
கேட்கவில்லை
ARTS LAND

# கேட்கவில்லை!

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

வெளியீடு:

சி. கே. ஆறுமுகம்
பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

இரண்டாம் பதிப்பு
உரிமையுடையது
1—9—55

77218

விலை 0—10—0

ஹிந்துஸ்தான் அச்சுக்கூடம், கோவை.

# பதிப்புரை.

இது ஒரு சம்பிரதாயமுறை. ஆசிரியருக்கும் அச்சகத்தாருக்கும். முன்னுரை, சிறப்புரை அளித்த அறிஞர்களுக்குமாகச் சேர்த்து நன்றி செலுத்த ஏற்படும் ஒரு வாய்ப்பு. ஆனால் சம்பிரதாய முறைப் படி நான் இங்கே ஆசிரியரைப்பற்றி மிகைப் படுத்தப் போவதில்லை. காரணம் திரு. அண்ணா ஆசைத்தம்பி அவர்களை தமிழகத்தில் அறியாத வர்களோ அவரது எழுத்தோவியங்களை படிக்காதவர் களோ இல்லை எனலாம். எனவே அவரைப்பற்றி கூறுவது சர்க்கரை இனிக்கும் என்று சொல்வது போலாகும்

அண்ணா ஆசைத்தம்பி அவர்களின் "கேட்கவில்லை :'ஒரே இரவு" "இல்லை" "அவன்" "சிறைச்சாலை" முதலிய சிறு கதைகள் இதனுள் அடக்கம். இதனை முன்னர் புத்தகமாக வெளியிட்ட முரசொலிப்பதிப்பக உரிமையாளர் நண்பர் திரு. நா. கிருஷ்ணன் அவர்களிடம் வெளியிடும் உரிமையைக் கேட்டேன். தந்தார் மனமுவந்து.

திரு. அண்ணா ஆசைத்தம்பி ஆவர்களின் கருத்தோவியங்களை வெளியிடும் பேறு பெற்றதற்காக ஆசிரியர் அவர்களுக்கும், வெளியிட வாய்ப்பளித்த நண்பர் திரு. நா, கிருஷ்ணன் அவர்களுக்கும் எனது உள்ங்கனிந்த நன்றி.

வணக்கம்,

கோவை. சி. கே. ஆறுமுகம்.

# கேட்கவில்லை!

காலம் கெட்டுப்போய்விட்டதாகவே ஓலமிடுகிறார்கள். கலி வந்துவிட்டானாம்! அதனால்தான் எல்லாம் தலைகீழாக நடக்கிறதாம்! பழையகாலப் பத்தாம் பசலிகள் சமயம் கிடைத்தபோதெல்லாம், யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் சொல்லத் தவறுவதில்லை.

சாம்பசிவ ஐயர் அடிக்கடி இப்படி கூறுவதுண்டு. சாஸ்திரங்களையும், பழைய சம்பிரதாயங்களையும் யாரும் மதிப்பதில்லையே என்று ஐயருக்கு மிகவும் வருத்தம். சாஸ்த்ரிய சம்பிரதாயம் மறுபடியும் ஜனங்களிடையே பரவ, சில சங்கங்களைக்கூட ஐயர் ஸ்தாபித்தார். அறிவுக் காலத்திலே இந்தச் சங்கங்களை யார் மதிப்பார்கள்! ஐயரின் பேச்சைக் கேட்க ஆட்களே இல்லை.

ஐயரின் மனைவியே ஐயர் பேச்சைக் கேட்பதில்லை. கடவுளைத் தூக்கி உடைப்பிலே போடுங்க, என்று அந்த அம்மாள் கடுங் கோபத்துடன் பலதடவை கூறியிருக்கிறாள், குறையைத் தீர்த்துவைக்காத கடவுளுக்கு திட்டுத்தானே கிடைக்கும்? ஐயரின் பக்தியும் அதிக நாள் நீடிக்கவில்லை. கல்யாணமான 10 வருடத்தில் ஐயருக்கு கடவுள்மீது கசந்துவிட்டது. கடவுள் காரியத்திற்கு கால்துட்டுகூட செலவழிப்பதில்லை என்று கங்கணம் கட்டியுள்ளார்.

சாம்பசிவ ஐயர் சாதாரண ஆளல்ல, பெரிய மிராசுதார் ஆகாகானுக்கும் அய்தராபாத் நிஜாமுக்கும் அடுத்தபடியாக உள்ள ஆஸ்திக்காரரோ என்று அனைவரும் நினைக்கக்கூடிய அளவுக்கு பெரிய பணக்காரர்.

## கேட்கவில்லை!

அரண்மனை போன்ற பெரிய மாளிகையும், ஐயருக்கு ஒன்று, அம்மாவுக்கு ஒன்று, ஆபீசுக்கு ஒன்று என்று கால் டஜன் கார்கள் மட்டுமல்ல, சிவனுரின் மாட்டு வாகனமும் அர்ஜுனன் அமர்ந்து கிருஷ்ணபரமாத்மா ஓட்டிச் சென்ருரே ......அத்தகைய குதிரை வாகனமும், இன்னுரன்ன, இல்லை என்ற குறையின்றி ஐயரிடம் எல்லாம் இருந்தன.

ஆனுல்.........

ஒன்றே ஒன்று மட்டும் இல்லை.—ஐயருக்குப் பின் அவர் பெயர் சொல்ல, கல்யாணமாகிப் பத்து வருடங்கள் ஓடியும் ஒரு பிள்ளைகூட இல்லை. பிள்ளை இல்லாக் குறையை நீக்க அந்தக் கடவுள் கருணை காட்டாததாலேயே, அவர் மனைவியும் அவரும் கடவுளை வெறுங் கல்லாகவே கருதினர்.

பத்து வருடங்களுக்குப் பின் ராஜம் எப்படித்தான் பிறந்தாளோ? அவளுக்குப் பின் ஐயருக்கு எதுவுமே பிறக்கவில்லை. யாருக்காவது இரட்டைக் குழந்தைகள் பிறந்து, இரண்டும் ஆண் என்று பத்திரிகையில் செய்தி வந்தால்...... "அடபகவானே! அதிலே எனக்கொன்றை அளித்திருக்கக் கூடாதா?" என்று கேட்க நினைப்பாரே தவிர, கேட்டதே இல்லை!

கடவுளைக் கல்லாகக் கருதும் ஐயர் எப்படிக் கேட்க முடியும்? அடுத்து இருப்பவனை 'ஐயா' என்று கூப்பிட்டால் 'என்ன' என்று கேட்பான். செவிடனுக இருந்தால், கொஞ்சம் உரக்கக் கூப்பிட்டால், திரும்பிப் பார்த்து கேட்கத்தான் செய்வான். தூரத்திலே இருந்தால்...ஒலிபெருக்கி அமைத்து அமைத்தால், அவசியம் இருக்குமிடத்திற்கு ஓடிவந்து கூப்பிட்டது எதற்கு என்று கேட்காமல் போகமாட்டான். எங்கும் இல்லாத ஒருவனை எப்பத்தான் கூப்பிட்டாலும் வருவானு? அப்படிப்பட்ட கடவுளிடம், அப்பனே எனக்கொரு ஆண் பிள்ளையைக் கொடு, என்று அனுபவப்பட்ட ஐயர் கேட்பாரா?

தன்னையும் தன் மனைவியையும் வைத்தியர்களிடம் நன்கு பரிசோதித்துப் பார்த்தார் ஐயர். பீஸ் இவ்வளவு வேண்டும். அவ்வளவு வேண்டும், என்று வைத்தியர்கள் கேட்கவே யில்லை.

ஐயர் அதிகமாகவே அள்ளி வீசுவார் என்று அவர்களுக் குத் தெரியும்போது கேட்கவேண்டிய அவசியமென்ன? ஏழை எளியவர்களிடமென்றால், பணம் இருக்கிறதா என்று வைத்தியர்கள் கேட்பார்கள். கொடை வள்ளல் ஐயரிடம் கேட்பார்களா? ஐயர் ஆயிரமாயிரமாகச் செலவு செய்தார்.

ஆனால்.........

"மிஸ்டர் ஐயர்! உங்களுக்கு இந்தப் பெண்குழந்தை பிறந்ததே ஆச்சரியம்!" என்றனர் வைத்தியர்கள்.

இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளட்டுமா, என்று வைத்தியர்களிடம் ஐயர் கேட்கவேயில்லை. ஒரு கல்யாண மென்ன, ஒன்பது கல்யாணம் செய்துகொண்டாலும், பிள்ளை பெறும் தகுதி தன்னிடம் இல்லை என்பதை மட்டும் ஐயர் தெரிந்துகொண்டார். தன் மனைவிக்கு இன்னொரு கல்யா ணம் செய்துவைத்தால் ஒரு வேளை பிள்ளை பிறக்கலாம் என்பதை ஐயர் புரிந்து கொண்டார். இந்நிலையில் மறு விவாகம்பற்றி ஐயர் நினைக்கவோ, கேட்கவோ செய்தாரா?

இன்னொரு கல்யாணத்திற்கு ஜோஸ்யன் எவ்வளவோ சிபார்சு செய்தான்; கல்யாணத் தரகன், அப்சரஸ் போன்ற அடுத்த பெண்களைக் காட்டியும் ஆசை ஊட்டிப் பார்த்தான். இருவர் பேச்சையும் ஐயர் கேட்கவே இல்லை.

அபூர்வமாகப் பிறந்த ராஜமாவது ஆணாகப் பிறந்திருக் கக் கூடாதா என்ற கவலை ஐயருக்கு இருக்கத்தான் செய்தது பெண் இருந்து பயனென்ன? என்றாவது ஒருநாள் இன் னொருவன் வீட்டுக்குப் போகவேண்டியவள் தானே பெண்?

போகக்கூடாது என்று பெண்ணுக்குக் கட்டளையிட்டால்...... புருஷன் ஒப்புக்கொள்வானா ? சமூகம் பேசாமலிருக்குமா ? பெண்தான் கேட்பாளா ?

ஆண் பெண்ணாக மாறும் விந்தையைப் பத்திரிகைகளிலே படித்த ஐயர் ஆச்சரியப்பட்டிருக்கிறார். அது எப்படி என் ராஜத்தை ஆணாக மாற்ற முடியுமா, என்றெல்லாம் எழுதிக் கேட்க ஐயர் நினைத்தது உண்டு. ஆனால், எழுதிக் கேட்கவே இல்லை.

இந்த விசித்திர விஷப் பரீட்சைக்கு யார்தான் முன்வருவார்கள் ? பெற்ற தாய் சம்மதிப்பாளா ? ஏதோ ஒரு பெண்ணாவது பிறந்ததே என்ற ஆறுதலில் இருந்தார் சாம்பசிவ ஐயர்.

ராஜத்தை செல்லமாக வளர்த்து வந்தார். தரையில் நடந்தால் பாதம் தேய்ந்துவிடுமென்று ஐயர் கருதினாரோ, அல்லது அந்தஸ்தை நினைத்தாரோ தெரியாது. ராஜத்தை கவனிப்பதற்கு மட்டும் அரை டஜன் ஆட்களை நியமித்தார்.

அம்மா, பசிக்குது, சாப்பாடு வேண்டும், என்று ஒரு நாள்கூட குழந்தை ராஜம் கேட்டதே இல்லை. பழவர்க்கங்களும் பலகார தினுசுகளும், வேளை தவறாமல் சாப்பிடும் குழந்தைக்குத் திணித்துக்கொண்டேயிருந்தால் பசி எடுக்குமா ? ராஜம்தான் கேட்பாளா ?

எனக்கு பொம்மை வேண்டும், பட்டாடை வேண்டும் என்று ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைதான் கேட்குமே தவிர, பணக்கார ராஜத்திற்கு கேட்க வேண்டிய அவசியமென்ன ? விளையாட்டுச் சாமான்கள் கடைகளுக்கு வந்து இறங்குமுன், பணக்கார சிறு பிள்ளைகளின் கைகளிலே காட்சியளிக்கும் வாய்ப்பு இருக்கும்போது ராஜம் கேட்பாளா?

ராஜத்திற்கு பன்னீர் என்றால் நன்றாகத் தெரியும்.

ஆனுல் கண்ணீர் என்றுல் அவளுக்குத் தெரியவே தெரியாது

ராஜம் மேடு பள்ளம் தெரியாமல் வளர்ந்து வந்தாள். ஐந்து வயதை ராஜம் அடைந்ததும் பள்ளிக்கூடத்திற்குப் போகமாட்டேன் என்று பிடிவாதம் செய்தாள். படிப்பு விஷயத்தில் குழந்தைகளின் விருப்பப்படி பெற்ருேர்கள் நடக்க முடியுமா? ராஜத்தின் பேச்சை பெற்ருேர்கள் கேட்கவே இல்லே.

ராஜம் பள்ளியிலே சேர்க்கப்பட்டாள். தனி ஆசிரியர் ஒருவரும் ராஜத்திற்கு தினசரி 'டியூசன்' எடுத்தார். ராஜம் நன்ருகப் படித்தாள். வகுப்பில் முதன்மையாகத்தேறி முன்னேறி வந்தாள்.

வளர்ச்சி — அதிலும் பெண்களின் வளர்ச்சி ஆச்சரியமானது. பேபி ராஜம் குமாரியாக வளர்ந்தாள்.

பணக்காரி என்ற செருக்கோ, உயர்ந்த ஜாதி என்ற திமிரோ ராஜத்திடம் இல்லவே இல்லே. படிப்பு அவளேப் பண்புள்ளவளாக்கியது. பலரோடு பழகி உலகத்தோடு ஒட்டி ஒழுகும் நல்ல ஒழுக்கத்தை ராஜம் கற்றுக்கொண்டிருந்தாள். ராஜம் எங்கும் செல்வாள்: எப்போதும் வருவாள், எவரும் எதுவும் கேட்கக்கூடாது; கேட்டதே இல்லே. ராஜம் வீட்டிற்கு ராணி மட்டுமல்ல, விவேகியும்கூட! யார் என்ன கேட்கமுடியும்?

ராஜம் பருவமடைந்தவுடன், கல்யாணம் செய்யலாமா என்று ராஜத்தை பெற்ருேர்கள் கேட்கவில்லே. ஆனுல் நல்ல வரனுகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கேட்கவில்லை !

எந்த வரனும் ராஜத்தை கேட்டு வரவே இல்லை. பணக்கார வீட்டுப் பெண்ணைக் கேட்டால், கொடுப்பார்களோ, இல்லையோ, கேட்டுக் கொடுக்காவிட்டால் அவமானமாச்சே, என்றெல்லாம் எண்ணி எல்லோரும் மௌனமாக இருந்தனர்.

ஆனால்.........

ராஜத்தின் மனம் சும்மா இருக்கவில்லை. காதல் புகுந்துகொண்டு களிநடனம் ஆடியது. காதலை யார்தான் என்ன தான் கேட்கமுடியும்? யாரையும் கேட்டுக்கொண்டா இதய வீட்டில் இடம் பெறுகிறது?

கல்லினுள் இருக்கும் தேரைக்கும் தெரியாமலே அந்த உள்ளத்திலே நுழையும் சக்தி காதலுக்குண்டு. ராஜம் உள்ளத்திலே காதல் புகுந்ததிலே அதிசயம் என்ன? சூரியனே, நீ உதயமாகக்கூடாது என்று உலகமே கேட்டுக்கொண்டாலும் அவன் கேட்பானா? காதலும் அப்படிப்பட்டது தானே?

ராஜம் தன் காதலை வெளியிடவே இல்லை. வெளியிட்டால் காதல் நிறைவேருது என்று அவளுக்கு நன்கு தெரியும். இஷ்டப்படி நடக்கும் தந்தை, இந்தக் காதலை ஒருபோதும் ஏற்கமாட்டார் என்று நிச்சயமாக முடிவு செய்திருந்தாள்.

அவள் காதலன் பெயர் கந்தசாமி. பெயர் கந்தசாமியாக இருப்பதால் தந்தை கடுங் கோபம்கொள்வார் என்று அவள் முடிவு செய்யவில்லை. கந்தசாமி ஓர் ஆதித் திராவிடன்.

பிராமணப் பெண் ஆதி திராவிடனை மணக்க ராஜத்தின் தந்தை எப்படி சம்மதிக்க முடியும்?

கந்தக் கடவுள் குறத்தி வள்ளியை கல்யாணம் செய்தார் என்ற கதை எல்லோருக்கும் தெரியத்தான் செய்யும். அதற்காக பிராமணப் பெண்ணுக்கும் ஆதி திராவிடருக்கும் திருமணம் நடத்திவைக்க சாம்பசிவ ஐயர் சம்மதிப்பாரா?

பிராமண ருக்மணிதேவிக்கும் அருண்டேல் துரைக்கும் கலப்புமணம் நடந்த வரலாறு உலகம் அறிந்ததுதான் ஆனல்—ஆதி திராவிட கந்தன் அருண்டேல் துரையாக முடியுமா?

பிராமண லட்சுமியை மகாத்மா காந்தி மகன் கலப்பு மணம் செய்ததும் சரித்திர பிரசித்தி பெற்றதுதான். ஆனல் கந்தன் காந்தியார் மகனுக முடியுமா? சாம்பசிவ அய்யர் சம்மதிப்பாரா? சமூகம் சம்மதிக்குமா?

இராஜம் இதையெல்லாம் எண்ணிப்பார்த்தாள். பல நாட்கள்—பல வாரங்கள்—பல மாதங்கள்—பகலிரவு விழித்தது. கற்பனையுலகிலே நடமாடி யோசித்து யோசித்துப் பார்த்தாள். தந்தையைக் கேட்கக்கூடாது என்று முடிவுக்கு வந்தாள், ராஜம் தந்தையைக் கேட்கவே இல்லை.

ஆனல்.........

சாம்பசிவ ஐயரும் ராஜத்தைக் கேட்கவேயில்லை. வரன் தேட ஆள்மேல் ஆள் அனுப்பினர். இதை அறிந்த ராஜம் திடுக்கிட்டாள் என்றாலும், திட்டமும் தீட்டினுள்.

ராஜத்திற்கு நீ நான் என்று வரன்கள் குவிந்துகொண்டிருந்தனர். உனக்கு எந்த மாப்பிள்ளை யம்மா பிடிக்கிறது, என்று ராஜத்தை சாம்பசிவ அய்யர் கேட்க நினைத்தார். ஆனல் — அன்றுதான் ஜாதிபெரியவர்கள் சாம்பசிவ ஐயரிடம் பதறிக்கொண்டு ஓடி வந்தனர். பத்திரிகைகளைக் காட்டினர்.

**கேட்கவில்லை!**

---

கலப்பு மணம் என்ற தலைப்பு கொடுத்து ராஜத்திற்கும் கந்தனுக்கும் பதிவு திருமணம் நடந்துவிட்டதாகச் செய்தியைக் கண்டு ஐயர் ஆத்திரப்பட்டார். துரோகி, என் சொத்தில் ஒரு பைசாக்கூட கிடையாது என்றார் ஐயர்.

கட்டுடலும் கல்வியறிவும் நிரம்பிய கந்தன் என்ன, கையாலாகாதவனா? கருத்தொருமித்த காதலரிருவர் ஒன்று பட்டபின் பொன்னும் பணமும் தேவையா? ராஜம் சாம்பசிவஐயரை ஒரு செல்லாகாசுகூட கேட்கவில்லை.

ராஜத்தின் தியாக உள்ளத்தைப் பாராட்டி முற்போக்கு வாதிகள் வாழ்த்தினர்; சீர்திருத்தவாதிகள் பூரித்தனர்; சாம்பசிவ ஐயர் சீறினார்; ஆனால்—பகுத்தறிவு சிரித்தது.

ராஜம் கந்தன் வாழ்க்கையிலே கேட்டிராத இன்பமெல்லாம் பெருக்கெடுத்தோடியது.

★

# ஒரே இரவு!

ஒரே இரவு!

கமலா, அந்த இரவை நீ மறந்திருக்கமாட்டாய், மறந்திருந்தாலும் இப்போது நினைவுப்படுத்திக்கொள்ளவேண்டும், விதை செடிக்கு தாய் என்பதைப் போல பழைய விஷயம் புதுமைக்குத் தாய். அந்த ஒரே இரவு முதல் இரவுக்குத் தாயாகப்போகிறது.

உனக்கும் அந்த இரவுக்கும் சம்பந்தம் இல்லை என்று நீ நினைக்கலாம். ஆனால் கமலா, நீயும் நானும் உயிர்த் தோழிகள்.

நம் கல்லூரி வாழ்க்கையிலே, கமலாவும் விமலாவும் அபூர்வ சகோதரிகள் என்று அடுத்தவர்கள் பேசாமல் இருந்தார்களா?

கமலா இருக்கும் இடத்தில் விமலா இருப்பாள், விமலா இருக்கும் இடத்தில் கமலா காட்சி அளிப்பாள் என்று எல்லோரும் பேசுவதில்லையா?

அப்படி அவர்கள் பேசியது பொய்யா, கமலா?

கல்லூரி வகுப்பிலே நீயும் நானும் அடுத்தடுத்தே அமருவோம்; உன் கூந்தலில் ரோஜா மலர் இருந்தால், என் கூந்தலில் மல்லிகை இருந்ததே இல்லை. நீ காஞ்சிபுரம் கட்டும்போது நான் பெங்களூர் உடுத்துவதில்லை.

உன்னை அழைப்பதாக நினைத்து பேராசிரியர் என்னை ஒருநாள் அழைத்துப் பேசினதில்லையா? நீயும் நானும் கல்லூரி வாழ்விலே இரட்டையர்களாக இருந்தோம்.

நினைவு வந்துவிட்டதா கமலா? கல்லூரி வாழ்வே இன்பமானது தான்; அதிலும் கல்லூரி வாழ்வில் காதல் சேர்ந்துவிட்டால்...கேட்கவேண்டுமா? என் காதலர்...... அதுதானடி கேசவ்...நினைவு வந்துவிட்டதா?

நினைவு வராமல் என்ன செய்யும்? நான் என்று நினைத்து, உன் முதுகிலே கேசவ் தட்டியதை உயிர் உள்ள வரை நீ மறக்கமுடியுமா? அந்தக் காதலர்...?

கமலா, எனக்கு வெட்கமாய் இருக்கிறதடி. அவருக்கும் எனக்கும்...கமலா, சொல்லட்டுமா......கல்யாணமடி கல்யாணம்!

நீ ஆச்சரியப்படுவாய்! என் காதல் நிறைவேருது என்று நீ சொல்லாத இரவு பாக்கியுண்டா?

'கனவில் கண்ட காதலனை மனோன்மணி அடைந்திருக்கிறபோது, கண்முன் கண்ட காதலனை எப்படியும் அடைவேன்' என்று நான் உறுதியாகச் சொன்னேன்.

'காட்டில் கண்ட காதலனை சகுந்தலையால் அடைய முடியவில்லை' நீ திரும்பிக்கூறி வெற்றி பெற்றவளைப்போல பூரித்தாய். இப்போது என்னடி சொல்லுகிருய்?

என் கேசவ் என்னை மணக்கப் போகிருர். நேற்று தான் ஜோதிடர் வீட்டுக்கு வந்தார். என் சாதகத்தையும் கேசவ் சாதகத்தையும் பார்த்தார். சாதகப் பொருத்தம் பிரமாதம் என்று அவர் வாயாலேயே சொன்னுர்.

அப்பா அதைக் கேட்டு ஆனந்தத்தில் அப்படியே மூழ்கிவிட்டார். அந்த சோதிடருக்கு இனமாக ஒரு

ரூபாய் அதிகமாகவும் கொடுத்தார். அவரேதான் முகூர்த் தத்துக்கு நாளும் குறித்தார்,

அந்த நாள்...சீக்கிரம் வரமாட்டேன் என்று சத்தியாக் கிரகம் செய்கிறதடி. ஹாஸ்டலிலே இருக்கிற மாணவர் கள் வீட்டுக்கு செல்லும் விடுமுறைக்கும்—சிறையிலே இருக்கிற கைதிகள் விடுதலைக்கும்—விரல்களை மடக்கிக் கொண்டு இருப்பதுபோல-விதவிதமான கற்பனையை தினம் ஒன்ருகச் செய்துகொண்டிருக்கிறேன். இதைத்தவிர நான் வேறு என்ன செய்யமுடியும்?

'ஏன் டிரங்கு பெட்டியில், துணிகளுக்கடியில் அவர் போட்டோ ஒன்றுதான் ஒளித்துவைத்திருக்கிருயே, அதை சதா பார்த்துக்கொண்டு, ''பர்த்தாவே! என் காதல் தெய் வமே!'' என்று பூஜை செய்கிறதுதானே என்று நீ என்னைக் கேட்கக் கூடியவள்தான்.

ஏண்டி! காலை மாலை நீ கோயிலுக்குப் போகிருயே எதற் காக? கடவுளை வணங்கத்தானே? நான்உன்னை கேட்கி றேன். தூணிலும் துரும்பிலும் நீ தேடுகிற கடவுள் இருக் கும் போது எதற்கடி கோயிலுக்கு போகிருய்? துரும்புக்கும் தூணுக்கும் துதி பாடிக்கொண்டு வீட்டிலே இருக்கலாமல் லவா? இப்படி நீ இருப்பாயா?

இப்போது சொல்லடி: என் கேசவை போட்டோவில் பார்ப்பதைவிட... தினம் ஒரு தடவையாவது நேரில் பார்த் தால்.........அந்த இன்பத்தை எழுத முடியுமா? சொல்ல முடியுமா?

கல்லூரியிலே அவர் நம்கூட படிக்காவிட்டாலும், தின மும் தரிசனம் தர தவறவே மாட்டார். நாம் நாலைந்து பேர்கள் கூடி இருந்தாலும் என்னை மாத்திரம் ஓரக் கண் ணால் பார்த்து, சிரிப்பை எரிந்துவிட்டு செல்வார்.

அப்படிப்பட்ட இன்பத்தை போட்டோவிலே பெற முடி யுமா? கண்ணை மூடிக்கொண்டு, நானும் அவரும் ஓடி ஆடி விளையாடுவதுபோல் கற்பனை செய்வதிலே ஒரு தனி இன் பம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கண்ணை விழித்துப் பார்கும் போது, எல்லாம் பொய் என்றதும் வேதனை அதி கரிக்கிறது.

நேற்று இரவு காண்டேகர் எழுதிய ஒரு புத்தகம் ஒன்று படித்தேன். அதில் வருகிற கதாநாயகி, தூங்கிற தன் அன்பனை முத்தமிடத் துடிக்கிருள்; முத்தமிடத் தீர்மானித்து, உதடுகளை ஒன்று சேர்க்க குனிகிருளே தவிர, முத்தமிடவில்லை. ஆனால் நான் முத்தமிட்டேன் அவர் போட்டோவை.

என் மனதிலே உள்ள வேதனையை இங்கு நான் யாரி டம் சொல்வது? கல்லூரியில் படிக்கும்போது உன்னிடமா வதுகூறி ஆறுதல் அடைவேன். இப்போது நீயும் அங்கே! அவரும் அங்கே!

என்னை பைத்தியக்காரி என்று சுலபமாக சொல்லி விடுவாய். காதல் காதல் என்று வீணாக வேதனைப் படுகி றேன் என்பாய், உனக்குப் பிரியமான மனோன்மணி இருக்கிருளே, அவளும் முதலில் காதலை அலட்சியமாகத்

தான் கருதினுள். ஆனல் அப்புறம் காதலுக்காக கலங்கித் தவித்தாளல்லவா? அதைப்போலத்தான் நீயும்.

உனக்கு இப்போது புரியாது. அந்த நாளை நினைத்துப் பார். நமது கல்லூரி ஆண்டு விழா நடந்ததே—அந்த நாள்தானே எங்கள் காதலுக்கு ஆரம்ப நாள்?

ஒரே இரவு

ஒப்பற்ற நாடகம்—ஒரே இரவு—ஒரே பார்வை—ஒரே சிரிப்பு! அங்குதனே காதல் உதயமாயிற்று? ஒரு பார்வையில் உதயமாகக் கூடாது காதல், ஒரு இரவில் உறுதியாவதில் ஆச்சரியமுண்டா?

ஆனல், கமலா! ஒரே இரவு நாடகத்தில் அவரை நான் எதிர் பார்த்தேனு? ஓரத்தில் உட்கார்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையில்தானடி காதல் ஒளிந்துகொண்டிருந்தது. நான் இருந்த இடத்தில் நீ இருந்திருந்தாலும் தப்பமுடியாது. எய்த அம்பு பாயாமல் என்ன செய்யும்? அவரைப் பார்த்து சிரிக்காமல் இருக்க என்னுல் முடிந்ததா?

கல்லூரிக் காதல் கானல் நீரைப் போன்றது, சிறைச் சாலை சிநேகிதத்தைப் போன்றது என்றெல்லாம் நீ சொன்னுய். ஆனல்......

அவர் என்னை அடைய செய்த முயற்சிகள் கொஞ்சமா, என்னை அவர் தனியே சந்திக்க அலைந்த அலைச்சல் கொஞ்சமா? அதிர்ஷ்டவசமாக அவர் தங்கையின் சிநேகிதம் எனக்குக் கிடைத்தது.

'ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாருங்கள்' என்று கூப்பிட மாட்டேன் என்கிறாரே, என நினைத்து வேதனைப்பட்டேன். யார் செய்த புண்ணியமோ, அவள் அவ்விதமே அழைத்தாள். நீயும் நானும் எப்படியோ போனோம். அங்கே அவர்...

பேச்சு கற்கண்டாக இனிக்கவில்லையா? அப்புறம் கடற்கரையிலே நீயும் நானும் அவரும் அவருடைய தங்கையும் வேர்க்கடலை சாப்பிட்டோம்.

நீயும் அவர் தங்கையும் கடல் அலைகளோடு விளையாடப் போய் விடுவீர்கள்; நானும் அவரும் காதல் அலையோடு...

அன்று இருட்டில் நாம் நால்வரும் நடந்து வந்தோம் விமலா என்று சொல்லி அன்றுதானே உன் முதுகில் தட்டினார்? காதலுக்கு கண் குருடு என்று என்னிடத்திலேயே நீ சொன்னாய். ஆனால்—இருட்டு நேரம் என்பதையும்—நம் இருவர் சாயலும் உருவமும் ஒரே மாதிரி என்பதையும் நீ மறந்து பேசினாய்.

எப்படியோ போகட்டும் கமலா! கல்லூரிக் காதல் கானல் நீருமல்ல, சிறைச் சிநேகிதமும் அல்ல, அன்பாலும் ஆற்றலாலும் ஆக்கக்கூடிய தாஜ்மஹால்தான்.

அந்த அற்புதமான தாஜ்மஹாலுக்கு நானும் கேசவும் அஸ்திவாரம் போட்டு விட்டோம். அடுத்தவாரம் வியாழக் கிழமை கல்யாணம். நீ இரண்டு தினங்களுக்கு முன்பே வந்துவிட வேண்டுகிறேன்.

உன் விமலா.

## 2

ஒரே இரவு!

முதல் இரவை மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான இனிய இரவுகளை சிருஷ்டிக்கட்டும் என்று ஆசீர்வதிக்கிறேன்; தினமும் உனக்காக ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.

உன் நீண்ட கடிதமல்ல, கதை கிடைத்தது. படித்துப் பார்த்தேன். உன் காதல் அதிலும் கல்லூரிக்காதல் வெற்றியடைந்தது உலகில் எட்டாவது அதிசயம்தான்.

பொதுவாகக் காதல் என்பது எட்டாத எவரெஸ்ட் சிகரந்தான்.

•

எவரெஸ்டில் எத்தனையோ பேர்கள் ஏற முயற்சித்தார்கள்; முடிவு மரணந்தான்.

காதல் பாதையிலே கணக்கற்ற பிணங்கள் கிடப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; காவியத்திலே படித்திருக்கிறேன்.

இயற்கைகூட காதலுக்கு விரோதி என்று எத்தனையோ இலக்கியங்களில் படித்திருக்கிறேன், லைலாவையும் கயசையும் எடுத்துக்கொள். இயற்கை வாழவிட்டதா?

எட்டாத எவரெஸ்ட் டென்சிங் என்பவருக்கு எட்டிவிட்டதைப்போல, உன் காதல் கைகூடி விட்டது.

டென்சிங்கை பாராட்டுவதைப்போல, நானும் செய்ய வேண்டியதுதான். அதற்குமேல் நான் என்ன செய்ய முடியும்?

" ஒரே இரவு "

இந்த வார்த்தைகளில் இருந்துதான் உன் வாழ்வென்னும் ஜீவநதி ஆரம்பிக்கிறது. உன் கல்யாணத்திற்கு " ஒரே இரவு " என்ற புத்தகந்தான் பரிசளிக்கப் போகிறேன்.

அந்த புத்தகத்தை நீ படித்தால்...........பயந்தே போவாய். அந்த புத்தகத்தில் வருகிற காதலர்களுக்கு இடையே இருந்தது ஒரே இரவு.

காதலன் ஒரு பெரிய அரசியல் வாதி; அவனைக் காதலிக்கிருள் உன்னைப்போன்ற உத்தமி. இயற்கையும் செயற்கையும் சதி செய்கிறது காதலன் கைதுசெய்யப்பட்டு 7 வருடங்கள் தண்டிக்கப்படுகிருன்.

காதலி கண்ணீர் விட்டாள் என்பது மட்டுமல்ல, ஏழு வருடங்கள் காத்திருந்தாள், காதலனைத் தொழுது கொண்டே,

ஏழு வருடங்களுக்குப் பின்—இரவில் விடுதலையடைந்த காதலன் காதலி வீட்டுக்கு வருகிருன். காதலி அவனை ஆனந்தமாக வரவேற்கிருள்; களைத்து வந்த காதலன் நன்ருகக் கண்ணுறங்கட்டும், காலையிலே எல்லாம் பேசலாம் என்று எண்ணி. கட்டிலிலே படுக்கை விரித்து "தூங்குங்கள் காலையில் பேசலாம்" என்ருள் காதலி.

"தூங்கவா? அன்பே, உனக்கும் எனக்கும் இடையே இருப்பது ஒரே இரவு" என்ருன் காதலன்.

" ஒரே இரவா? ஒன்றும் புரியவில்லையே" என்று திகிலோடு கேட்டாள் காதலி.

அன்பே! ஏழு வருடங்களுக்குப்பின் மாலேதான் விடுதலே அடைந்தேன். நாளே சூரியோதயத்தில் இன்னொரு குற்றத்திற்காக என்னே கைது செய்ய சட்டம் காத்திருக்கிறது என்ருன் காதலன்.

புழுப்போல் துடித்தாள் அந்தப் புண்ணியவதி. அதற்காக ஆதவன் அயர்ந்து தூங்கிவிடுவாஞ? ஆதவனேக் கண்டதும் போலீஸார் காதலனேக் கைது செய்கிருர்கள்.

இதுதான் விமலா ஒரே இரவு! இந்த 'ஒரே இரவு' உனக்குப் பரிசளிக்கப்படும். ஆஞல் உன்னுடைய ஒரே இரவு ஆயிரக்கணக்கான இரவுகளே......முத்தங்களே உண்டாக்கட்டும் என்று முழுமுதற் கடவுளே தினமும் பிரார்த்தனே செய்கிறேன்.

எவரெஸ்டில் ஏறியதற்காக டென்சிங் உலகமெல்லாம் பாராட்டும்போது, என் தோழியின் காதல் நிறைவேறுவதை என் உள்ளம் வேண்டாதா?

விமலா, இங்கு உன் கடிதம் கிடைத்தபிறகு உன் மாமி வீட்டுக்கு போனேன். அங்கு உன் ஆருயிர் காதலர் கேசவையும் கண்டேன். உன் கேசவைத்தவிர மற்றவர்களெல்லாம் இரண்டு நாட்கள் முன்பே வருகிருர்களாம். உன் கேசவ் மட்டும் கல்யாணத்திற்கு முந்திய தினந்தான் அங்கு வருவாராம். கல்யாணத்திற்கு முன் அதிகம் லீவு எடுப்பதைவிட, பின்பு லீவு எடுப்பது நல்லது என்று அவர் நிஃனக்கிருராம். நான் இரண்டு தினங்கள் முன்பே வந்து விடுகிறேன்.

அன்புள்ள கமலா.

## 3

விமலா வீட்டில் கல்யாண ஏற்பாடு தடபுடலாக நடந்துகொண்டிருந்தது. விமலா வீடு இரண்டு நாட்களாக

ரிப்பேர் செய்யப் பட்டு, மின் விளக்குகளால் நன்கு அலங் கரிக்கப்பட்டது.

விமலா வீட்டெதிரே பெரிய பந்தல் போடும் வேலையும் ஆரம்பமாயிருந்தது. உற்றார், உறவினர் நண்பர்கள் மற்ற வர்களுக்கு விருந்தை நடத்த தனி ஏற்பாடுகள் ஒருபுறம் நடந்தது.

விருந்தினர் ஒவ்வொருவராக வந்து சேர்ந்துகொண் டிருந்தனர். எதிரில் ஒரு வீட்டை சம்பந்தியர்கள் தங்க விமலா தந்தை ஏற்பாடு செய்திருந்தார். கமலா எழுதிய படி கேசவ் வீட்டார் இரண்டு தினங்களுக்கு முன்பே வந்து சேர்ந்தனர்.

கமலாவும் அன்று மாலையே வந்து சேர்ந்தாள். 'நாளை காலையில் உன் கேசவ் வருவதாக சொன்னாரடி' என்று விமலாவிடம் ரகசியமாக சொன்னாள் கமலா.

''வேறு என்னடி சொல்லி விட்டார்?'' என்று வெட் கப்பட்டபடி கேட்டாள் விமலா.

''சொல்ல வேண்டியதை 'முதல் இரவு' அன்று சொல் வாராம்'' என்று கிண்டலாக சொன்னாள் கமலா.

விமலாவுக்கு அன்று பொழுது போவதே கஷ்டமாக இருந்தது. கமலாவோடு பேசிப்பேசி பொழுதை எப்படியோ கழித்தாள்.

மறுநாள் விடிந்ததும் விமலா கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டே இருந்தாள். பகல் பன்னிரண்டாகியும் கேசவ் வந்துசேரவில்லை.

"என்ன கமலா இன்னும் அவரை காணோம்? எந்த வண்டிக்கு வருவதாகச் சொன்னார்?" என்று கொஞ்சலாகக் கேட்டாள் விமலா,

"ஏண்டி அவசரப்படுறே? மாலையில்தான் வரட்டுமே இடையிலே இருப்பது ஒரே இரவு! என்றாள் கமலா.

அப்போது வாசல் பக்கம் 'சார்' ஒன்று சப்தம் கேட்டது. எல்லோரும் வாசலைப் பார்த்தார்கள். அவர் வந்துவிட்டாரோ என்ற ஆவலோடு விமலா கமலாவை அழைத்துக் கொண்டு, மாடியில் இருந்து ஓடி வந்தாள்.

வாசலில் தந்தி பியூன் நின்று கொண்டிருந்தான். 'ஏண்டி! மாப்பிள்ளை இன்னும் வரவில்லை. அதற்குள் கல்யாண வாழ்த்துக்கள் வர ஆரம்பித்துவிட்டதோ என்று கமலா கேட்டாள்,

தந்தியை படித்துப் பார்க்க விமலாவின் தந்தை கண்ணாடியை தேடினார். உள் அறையில் இருந்ததால் விமலா, இந்த தந்தியைப் படி". என்று சொல்லி கொடுத்தார்.

"தந்தியைப் படித்த விமலா 'ஐயோ அப்பா' என்று அலறினாள். அடுத்த வினாடி விமலா கீழே விழுந்தாள்.

பரபரப்புடனே கமலா தந்தியை எடுத்துப் படித்தாள். "என்னம்மா? என்ன தந்தி?" என்று பதறிப்போய் கேட்டார் விமலாவின் தந்தை.

"இரயில்வே ஸ்டேஷனில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் கேசவ் இறந்து விட்டாராம்."

# அவன்?

ஆலமரத்தடியிலே அவன் நின்றுகொண்டிருந்தான். அவன் ஓர் பெரிய இடத்துப் பிள்ளை என்பதை அவன் அணிந்திருந்த ஆடைகள் கூறின. ஆழ்ந்த சிந்தனையோடு அந்த மரத்தடியிலே நின்று அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த மரத்திற்கெதிரே ஓர் பெரிய மாளிகை அமைந்திருந்தது. அந்த மாளிகையும் பெரிய இடத்தைச் சேர்ந்தது என்று, அதன் அமைப்பு கூறியது. மரத்தையும் மாளிகையையும் அவன் மாறிமாறிப் பார்த்தான். பார்க்கும் அந்த விழிகளிலே ஏதோ விஷயம் அடங்கி இருந்தது மாத்திரம் தெரிந்தது.

ஆனால் அவ்விஷயம் என்ன? மரத்தடியிலே அவன் ஏன் நிற்கிறான்? அவன் யார்? அந்த மாளிகைக்கும் அவனுக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா? சம்பந்தம் இல்லை என்பதை நிரூபிப்பதுபோல் அப்போது மாளிகையிலிருந்து வந்த வேலைக்காரன் "என்ன தம்பி! இங்கே ஏன் நிக்கிற? யாரைப்பார்க்கணும்? நீ யார்" என்று கேட்டான்.

"ஏன் நிற்கக்கூடாதா? வெளியூர் போகிறேன்; மரத்தடியிலே இளைப்பாறுகிறேன்" என்று அவன் அந்த வேலைக்காரனிடம் சொல்லிக்கொண்டு இருக்கும்போது ஒரு புதிய செவர்லெட் கார் வந்து மாளிகை முன் நின்றது.

காரையும், காரில் இருந்த ஆளையும் கண்டவுடன் அவன் ஓடமுயற்சித்தான். ஆனால் காரில் இருந்தோர், 'பிடியுங்கள்' என்று கூறியதும், மாளிகை வேலைக்காரன்

அவனை ஓடாமல் பிடித்துக் கொண்டான். அவன் ஓடத் திமிறிப் பார்த்தான். வேலைக்காரன் பிடியிலிருந்து அவனால் ஓட முடியவில்லை. அதற்குள் காரில் இருந்தோர் இறங்கி மரத்தை நோக்கி வந்தனர்.

''இங்கே ஏனடா வந்தீர்கள்?'' என்று அதிகாரமாகக் கேட்டான் அவன்.

''எஜமான்! நீங்க இப்படி கோபித்துக்கொண்டு ஓடி வரலாமா? உங்களை எங்கெங்கு தேடி அலைகிறோம் தெரியுமா? சீதையைத் தேட இராமபிரான்கூட இப்படி ஆள் விட்டதில்லை. தங்கள் தந்தை காரை எடுத்துக்கொண்டே தேடும்படி உத்திரவிட்டார். உங்களைத் தேடி அலைந்ததிலே ஒரு 'தெப்பம்' பெட்ரோல் செலவாகி விட்டது. வாருங்கள் போகலாம்'' என்று காரில் வந்தோர் அழைத்தனர்.

இந்த உரையாடலை, எதிரே இருந்த மாளிகையின் வேலைக்காரனும் கேட்டான். மரத்தடியிலே நின்ற வாலிபன் பெரிய பணக்காரன் என்றும், கோபத்தில் ஓடி வந்திருக்கிறான் என்றும் அவர்கள் பேச்சிலிருந்து அறிந்துகொண்டான். காரில் வந்த பெரியவர்களை 'அடே' என்று அழைத்ததிலிருந்து, அவன் ஓர் ஜமீன்தாராக இருக்கவேண்டும் என்று யூகித்தான்.

''எஜமான், நீங்க வந்ததில் இருந்து பெரிய அய்யா சாப்பிடவே இல்லை'' என்றார்கள் காரில் வந்தோர்.

'' சாகச்சொல்லு. என் வாழ்வைப் பாழ் படுத்த நினைக்கும்போது, நான் ஓடிவராமல் என்ன செய்வது? என்று கேட்டான் அவன்.

"இல்லை, எஜமான்! நீங்கள் இஷ்டப்பட்ட பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். இதை பெரிய எஜமான் ஒப்புக்கொண்டுவிட்டார்" என்று கூறினர் காரில் வந்தோர்!

இதற்குள் அந்த இடத்திலே கூட்டம் கூடிவிட்டது. மாளிகை வேலைக்காரன், அவனுடைய எஜமான் முருகேச ரிடம் பூரா விபரத்தையும் கூறினன். "இங்கே என்ன தக ராறு?" என்று வெளியே வந்து கேட்டார் மாளிகை முருகேசர்.

"இவர் கும்பம்பட்டி ஜமீன்தார் மகன். பேரு சொக்க நாதர். தந்தையோடு கோபித்துக் கொண்டு வந்து விட்டார். தேடி வந்திருக்கிறோம்" என்றனர் காரில் வந்தோர்.

"அடடே! கும்பம்பட்டி இளைய ஜமீந்தாரா இவர்? வீதியிலே நிற்கலாமா? இது என் மாளிகைதான். உள்ளே வாங்க" என்று கூறி, முருகேசர், எல்லோரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

எல்லா விபரத்தையும் முருகேசர் அறிந்துகொண்டார். இளைய ஜமீன்தார் சொக்கநாதரோ தன்னை அழைக்க காரில் வந்தோரின் பேச்சில் நம்பிக்கைப்படவில்லை. பெரிய ஜமீன் தார் வந்து இஷ்டப்படி கல்யாணம் செய்துக்கொள்ளலாம் என்று சொல்லி அழைத்தால்தான் வருவேன் என்றும் கூறினர். இளைய ஜமீன்தாரின் பிடிவாதத்தைக் கண்ட முருகேசர், காரில் வந்தவர்களிடம், "பெரிய ஜமீன்தார் வரும்வரை, சொக்கநாதன் என் மாளிகையிலே இருக்கட் டும்" என்றார்.

இதை கேட்டதும் காரில் வந்தோர்களின் முகம் கதிரவன் ஒளி பட்டதுபோல் ஜொலித்து மலர்ந்தது. பர்ஸை எடுத்து நூறு ரூபாய் நோட்டாக பத்தை எடுத்து "இந்தாங்க ஆயிரம் ரூபாய் நாங்கள் வரும் வரை இளையஜமீந்தார் செலவுக்கு இருக்கட்டும்" என்று முருகேசரிடம் கொடுத்தார்கள்.

"இது எதற்கு? நான் கவனித்துக்கொள்ள மாட்டேனா?" என்று கூறீ பணத்தை வாங்க மறுத்தார் முருகேசர்.

"நீங்க அப்படி சொல்லக்கூடாது. கும்பம்பட்டி 350 மைல்கள் இருக்கின்றன. நாங்கள் போய் பெரிய எஜமானை அழைத்துக்கொண்டு வரவேண்டும். இரு நாட்களாவதும் ஆகும். அதுவரைக்கும் செலவுக்கு வேண்டாமா?" என்று கூறி ஆயிரத்தை முருகேசரிடம் கொடுத்துவிட்டு காரில் வந்தோர் புறப்பட்டனர்.

இளைய ஜமீன்தார் சொக்கநாதருக்கு ஓர் தனி அறை ஒதுக்கப்பட்டது. ஒரு பெரிய ஜமீன்தார் மகன் தன் வீட்டில் தங்க வந்தது பெரிய பாக்கியம் என்று முருகேசர் கருதினார். தன் ஒரே மகள் மனோரமாவை இளைய ஜமீந்தாருக்கு பிடித்தால்...? இதற்குமேல் அவரால் ஆனந்தத்தை தாங்க முடியவில்லை. 'மனோரமா என்று கூப்பிட்டார்' 'என்னப்பா' என்று கேட்டபடி வந்தாள். "இளைய ஜமீந்தார் மேலே இருக்கிறார் மாலை டிபன் நீ தான் கவனிக்கவேண்டும்" என்றார். மனோரமா வாயளவில் மறுத்தாள். ஆனால் மனம் ஒப்புக்கொண்டுவிட்டது. ஈட்டிவிழி கட்டழகை காணும் போது மனம் ஒப்பாமல் என்ன செய்யும்?

மாலை டிபன் சாப்பிடும் போது முருகேசர், மனோரமா, சொக்கநாதர் ஆகியோர் சர்வசாதாரணமாகப் பழக ஆரம் பித்து விட்டனர். இரவு சாப்பாட்டின்போது மனோரமா மட்டும் சொக்கநாதர்கூட இருந்தாள். இருவரும் ஒரு வரை ஒருவர் பார்த்தனர். மனோரமா வெட்கத்தால் குனிந் தாள். "உன்னை மணக்க என் தந்தை சொல்லியிருந்தால் உடனே ஒப்புக்கொண்டிருப்பேன்; ஓடி வந்திருக்கமாட் டேன்" என்றார் சொக்கநாதர்.

பால் சாப்பிடச் சொன்னாள் மனோரமா முதலில் நீ சாப்பிட்டால்தான் நான் சாப்பிடுவேன் என்றார் சொக்க நாதர். குனிந்த தலை நிமிராமல் பொற்சிலைபோல் நின்றாள் மனோரமா. அடுத்த நிமிடம் அவள் உதட்டிலே பாலை ஊட்டினார் சொக்கநாதர். உன்னையே என் மனைவியாக்கிக் கொள்கிறேன் என்று உறுதி கூறினார் சொக்கநாதர்.

இவ்வளவு நடந்தது முருகேசருக்குத் தெரியாது. ஆனால் மனோரமாவைச் சொக்கநாதருக்குப் பிடிக்கவேண்டும் என்று தெய்வத்தைப் பிரார்த்தித்தார்; இன்பக் கனவு கண்டார்.

மறுநாள் காலை, மனோரமா, "அப்பா! அப்பா!" என்று அலறிக்கொண்டு ஓடிவந்தாள். "சொக்கநாதரை அறை யில் காணவில்லை, என் நகைகளைக் காணவில்லை" என்று கூறினாள். முருகேசர் திடுக்கிட்டார். இரும்புப் பெட்டியைப் பார்த்தார். காரில் வந்தோர் கொடுத்த ஆயிரம் ரூபாய் தவிர, இதர ரூபாய் ஒன்றுமே இல்லை.

"மோசம்! மோசம்!" என்று முருகப்பரும் கத்தினர். அன்றைய பத்திரிகையில், "ஜமீந்தாரைப்போல நடித்து மோசடி" என்று தலைப்புக் கொடுத்து ஓர் செய்தி பிரசுரமாகியிருந்தது. தன் வீட்டில் நடந்ததைப்போல அச்செய்தி இருந்தது. திருடர்கள் தன்னை ஏமாற்றிவிட்டதாக உணர்ந்தார் முருகேசர், தலையிலடித்துக்கொண்டார். போலீசுக்கு ஓடினர். புகார் செய்தார். தன்னிடமிருந்த ஆயிரம் ரூபாய் கள்ளநோட்டுகள் என்பதை உணர்ந்தார். இச்செய்தியும் மறுநாள் பத்திரிகையில் வெளிவந்தது.

(உண்மையாக நடந்த சம்பவத்தை தழுவி எழுதப்பட்டது.)

இல்லை!

---

"காதல் சாதாரணமானதல்ல, மனித சமுதாயத்தின் ஜீவனாகும். இனிமேல் காதல் அதோகதியாவதா? நீங்களெல்லாம் காதலுக்கு சமாதி கட்ட விரும்புகிறீர்களா? காதல் இன்றேல் சாதல் என்பார்கள்.

இந்த சட்டம் காதலுக்குக் கல்லறை கட்டுவதாக இருக்கிறது. அது அமுலுக்கு வரக்கூடாது. வந்தால்............ காதல்மேல் காதல்கொண்ட ஆண் பெண் இரு பாலர்களும் எதிர்த்துப் போராடாமல் இருக்கமாட்டார்கள். இதை உடனே கைவிடவேண்டும்".

இப்படி ஆணித்தரமாக சட்டசபையிலே நான் பேசினேன், ஒரு எம். எல். ஏ, வாகிய நான் பேசாமல் இருக்க முடியுமா? காதலுக்கு வந்திருக்கிற சட்ட ஆபத்தைத் தடுக்க, என்னைப் போன்ற எம். எல், ஏ. க்கள் தானே பேச வேண்டும்? மற்ற எம். எல். ஏ. க்கள் வாய்மூடி மௌனியாக இருந்தார்கள். நான் ஒருவன் தான் எல்லோரையும் என் பக்கம் இழுக்க ஆவேசமாக பேசினேன்.

'இனிமேல் யாரும் ஒரே ஜாதிக்குள் பெண் எடுக்கவோ கொடுக்கவோ கூடாதாம். வெவ்வேறு ஜாதிக்குள்ளே தான் கல்யாணம் செய்ய வேண்டுமாம். கலப்பு வேண்டுமாம். கலப்பு மணம் ஏற்பட்டு ஜாதிகள் அடியோடு ஒழியவே இந்த சட்டமாம்! இதை மீறினல் கடுமையான தண்டனை தரப்படுமாம்!"

இந்தச்சட்டத்தை நிறைவேற்ற விடலாமா? இது நிறை வேறினால் காதலின் கதி? என் அத்தைமகள் அமுதாவின் கதி? அமுதாவை நான் அடையவேண்டுமானால் இந்தச் சட்டம் நிறைவேறக்கூடாது. அதனால்தான் சட்டசபையிலே முழங்கினேன்.

ஆனால்.........

என்னை ஆதரிக்க சட்டசபையில் ஆட்களே இல்லை. என் பேச்சை ஒருவரும் மதிக்கவில்லை. சட்டமும் நிறை வேறாமல் இருக்கவில்லை. இனி என்ன செய்வது?

★ ★ ★

அன்பே அமுதா:

நாடு கெட்டுவிட்டது. காதலுக்கு கல்லறை கட்டப் பட்டு விட்டது. இனி நம் காதல் கை கூடப்போவதில்லை.

நம் இருவரின் காதலும் ஈடு இணையற்றது என்று வேறு யாருக்குத் தெரியப்போகிறது? சென்னை கடற் கரையைக் கேட்டால் அது சொல்லும்; சென்னையில் நாம் சந்திக்கும்போதெல்லாம், மெரீனு பீச் மணற்பரப்பிலே இரவு எட்டு மணி வரைக்கும், கரையும் கடலும் மோதுவதுபோல் இன்பப் பேச்சால், சிரிப்பால் இணைந்து, தினமும் பிரிவோம். இந்தக் காதல் இல்லை என்று போவதா?

அமுதா, இது அக்கிரமம்! ஆண்டவன் என்ன அவன் அப்பனுக்கும் அடுக்காத அக்கிரமம்! சொந்த ஜாதியில் எந்த பெண்ணையும் மணக்கக்கூடாதாம்!

இது கொடுமையிலும் கொடுமை! அத்தை மகளைக் கட்டும் உரிமைகூட இல்லாமல் போவதா?

கழுதையாகப் பிறந்தாலும் கால்மாகாணி யோகத்தோடு பிறக்கவேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் காதல் இருக்கிறதே, அது ஓர் 'கண்ருவி' பிறவி! இந்தக் காதல், உலகத்தில் எந்த நேரத்தில் பிறந்ததோ? காதலுக்கு இருக்கிற எதிர்ப்புக் கொஞ்சமா?

ஆண் பெண் உள்ளங்களிலே காதல் சுலபமாக நுழைந்துவிடுகிறது. ஆனல் வெளியே வர காதலால் முடிவதே இல்லை. பொறிக்குள்ளே புகுந்துவிட்ட எலி திரும்ப முடியுமா? தப்ப முடியுமா? அதைப்போலத்தான் உள்ளம் என்ற பொறிக்குள் சிக்கிய காதல், உயிரோடு தப்பமுடிவதில்லை— காதலை யார் ஏற்றுக் கொள்கிருர்கள்?

ஆணும் பெண்ணும் காதலித்தால், பெற்ருேர் எதிர்ப்பு சமூக எதிர்ப்பு, ஊரார் எதிர்ப்பு! இந்த நிலையில் காதல் எப்படி வாழ முடியும்? சாதலைத்தவிர வேறு வழியே இல்லை.

ஆனல், அமுதா! நமக்கு இந்த எதிர்ப்புகளெல்லாம் இல்லை. கண்ணகியின் தந்தையும் கோவலன் தந்தையும் பேசி முடித்துக் கொண்டதைப் போல, நீ எனக்கு, நான் உனக்கு என்று நம் பெற்ருேர்கள் முன்பே உறுதி செய்து கொண்டார்கள். ஆனல் நீயும் நானும் தான் கல்யாணம் பற்றிப்பேசவே இல்லை! அதனல் பாதகம் இல்லை, உன் படிப்பு முடிந்ததும் கல்யாணம் என்று உன் தந்தை கூறிவிட்டார். ஆனல்............சொந்த ஜாதியில் கல்யாணம்

செய்யக்கூடாது என்று சட்டம் சொல்கிறது? இனி நாம் என்ன செய்வது.

அமுதா, நான் ஓய்ந்திருக்கப்போவதில்லை! இந்த அரசாங்கத்தை ஒரு கை பார்க்கப்போகிறேன்! ஏறமுடியா எவரெஸ்ட் உச்சியை எப்படிப் பிடித்துவிட்டார்கள். நானும் டில்லிவரை காவடி எடுத்து கடைசி முடிவைக் காணப் போகிறேன்.

ஜாதி மதத்தில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்று முன்பு விக்டோரியா மகாராணியார் சாசனம் கூறியது, இந்தியா அரசியல் சட்டத்திலும் அது உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. மது குடிப்பதை தடுப்பது, பிரஜா உரிமையைத் தடுப்பதாகும் என்று வாதிடும் வக்கீல்கள் இருக்கும்போது சுப்ரீம் கோர்ட்வரை காதலின் முடிவைக் கண்டறியலாம் என்று கங்கணம் கட்டிவிட்டேன். கலங்காதே, கண்ணே!

காதல் என்பது தேன் கூடு. அதை அடையக் கொட்டும் விஷப்பூச்சிகளை வீழ்த்தியாக வேண்டும். அந்த வேலை முடிந்ததும், அழகிய பந்தலில் உனக்கும் எனக்கும் கல்யாணம் சரிதானே?

உன் அத்தான்.

★ ★

அன்புள்ள அத்தான்:

காதலுக்குக் கதவடைக்கும் தீர்மானத்தை தாங்கள் கண்டித்துச் சட்டசபையிலே கர்ஜனை புரிந்ததை பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். நீங்கள் ஒரேயடியாக அத்தீர்மானத்தை எதிர்த்திருக்கக் கூடாது.

பிறப்பிலேயே உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஜாதிகள் ஒழியத்தான் வேண்டும். ஒரே ஜாதிக்குள் பெண் எடுக்கவோ, கொடுக்கவோ கூடாது என்று வரும்போது, பத்து இருபது வருடங்களுக்குள் ஜாதிகளே கட்டாயம் இல்லாமல் போய்விடும் என்பதில் சந்தேகமே இல்லை.

பிராமணர் பிராமண வகுப்பிலும், நாடார் நாடார் வகுப்பிலும் கல்யாணம் செய்துகொண்டே இருந்தால் ஜாதி எந்த காலத்திலும் ஒழிய வழியே இல்லை.

வெவ்வேறு ஜாதியில் கலப்பு மணம் நடக்க வழியிருந்தால்தான், நாளடைவில் ஜாதி ஒழிய முடியும். இதற்கு வழி வகுக்கும் சட்டம் நாட்டுக்கு நல்லதில்லையா? அதை எதிர்க்கலாமா?.

விருப்பமுள்ளவர்கள் கலப்புக் கல்யாணம் செய்து கொள்ளட்டும் என்று திறமையாக பேசியிருக்கிறீர்கள். மலையாளப் பெண் ஒருத்தி என்னோடு படிக்கிறாள். திருவனந்தபுரத்தில் யாரும் கலப்புமணம் செய்து கொள்ளலாம் என்று ஒரு சட்டம் இருந்தும், அங்கு கலப்பு மணம் பெருகவே இல்லையாம் இதற்கு காரணம் அவள் என்ன சொல்லுகிறாள் தெரியுமா? கலப்பு மணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு அவர்களின் ஜாதி எதிர்ப்பு அதிகமாக இருக்கிறதாம்! சட்டம் கலப்புமணத்தை மட்டும்தான் ஆதரிக்கிறதாம். எதிர்ப்பைச் சட்டம் சமாளிப்பதில்லையாம்! இதனால்தான் கலப்பு மணம் அதிகம் பெருகவில்லையாம்!

ஆனால் இப்போது நீங்கள் எதிர்க்கிற சட்டம், சமூக ஜாதிகளின் எதிர்ப்பை இல்லாதபடி செய்துவிடுகிறது.

யாராய் இருந்தாலும் ஒன்று கலப்புமணம் செய்யவேண்டும் அல்லது காலமெல்லாம் கல்யாணம் ஆகாமல் இருக்கவேண்டும். எல்லோரும் முதல் முடிவுக்குத்தான் வருவார்களே தவிர, இரண்டாவது முடிவை மனதால்கூட எண்ணிப்பார்க்க மாட்டார்கள். இதனுல் கலப்பு மணம் பெருகி ஜாதிகள் தானுகவே ஒழியும். இப்படிப்பட்ட சட்டத்தை நீங்கள் எதிர்க்கலாமா?

இந்தச் சட்டத்தால் தனிப்பட்டவர்களின் காதலுக்கு சங்கடம் ஏற்படலாம்! தனி நபரின் நலத்திற்காக பொது நலம் பாழாகுவதா?

•

உங்கள் 'காதல் மாளிகை' காங்கிரீட்டில் கட்டப்பட்டிருக்கலாம்; நீங்கள் அதில் கனகுஷியோடு வாழ்ந்துவரலாம்! அனுல் - காலரா முற்றுகையிடும் போது, ஊரை காலி பண்ணும் அவசியம் ஏற்பட்டால், மாளிகையைவிட்டு வெளியேற மறுக்க முடியுமா? மறுத்தால் மாளிகையே மயானமாகிவிடும்! அந்த நிலை வரவேண்டுமா? காதல் காதல் என்று கதைக்காதீர்கள்! போன வருடம் என் கூடப் படித்த அரங்கநாயகி ஒரு பிராமணப்பெண். கபூர் என்ற இஸ்லாமியரைக் காதலித்தாள். சமூகம் அனுமதிக்காததால் எவருமறியாதபடி ஏரோப்ளேன் ஏறி கல்யாணம் செய்து கொண்டாள். கலப்புமணச் சட்டம் அமுலில் இருந்தால் இந்த கஷ்டம் ஏன்?

"ஆரியராவது திராவிடராவது—எல்லாம் கலந்து விட்டது—ஆரியரும் இல்லை திராவிடரும் இல்லை" என்று கம்யூனிஸ்ட் காந்தா நேற்றுவரை கண்டபடி பேசினுள்.

எங்களோடு படிக்கின்ற பிராமணப்பெண்ணுன ராஜம் வைத்தியக் கல்லூரி மாணவரான கந்தன் என்ற ஆதித் திராவிடரை காதலித்தாள்.

கந்தனே ராஜம் நேர் வழியில் மணக்கவே முடியவில்லை. சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கொல்லைப்புறவழி யாக வந்து மந்திரி யானதைப்போல, ராஜமும் அக்கிரகாரத் தின் கொல்லைப்புறமாக வந்துதான் கந்தனை கணவனுக அடைந்தாள்.

இதைக் கண்டவுடன் கம்யூனிஸ்ட் காந்தா 'கப்சுப்' என்று இருக்கிறுள். ஆரிய திராவிட பேதம் இருப்பதை எங்களிடம் ஒப்புக்கொண்டாள். இந்த ஆரிய திராவிட பிரச்சனே ஒழிய வேண்டும் என்ருல், கட்டாயக் கலப்பு மணச்சட்டம் அவசியம் தேவை.

ஏதோ என் காதலை நம்பி இந்தச் சட்டத்தை எதிர்த்து மோசம் போகாதீர்கள். சட்டக் கல்லூரியில் படிக்கும் வேறு ஜாதி ஆறுமுகத்தை, கலப்பு மணச்சட்டம் அமுலுக்கு வரும் தை முதல் நாளில் நான் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

நீங்கள் வரவேண்டும் என்பது இல்லை. எட்டாம் நம்பர் தந்தி மட்டும் கொடுத்தால் போதும் ஆயாசப்படாதீர் கள், அத்தான்.

இப்படிக்கு,
மாஜி அமுதா,

தற்போது மிஸஸ் ஆறுமுகம்.

"ஆறுமுகம்! ஆறுமுகம்!!" என்று அலறிக்கொண்டே எழுந்தேன்.

"ஆறுமுகம் இல்லையே! வெளியே போய்விட்டானே! என்ன வேண்டும்? ஆறுமுகத்தை கடைக்கு அனுப்பவேண்டுமா?" என்று கேட்டாள் என் தாய்.

அப்போதுதான் நான் கண்டது கனவு என்று உணர்ந்தேன். நான் கண்ட காட்சிகள் எதுவும் இல்லை.

நான் எம். எல். ஏ. யும் இல்லை! கட்டாய கலப்பு மணச்சட்டம் வரவும் இல்லை! அமுதாவும் இல்லை! காதலும் இல்லை! கடிதமும் இல்லை! ஒன்றுமே இல்லை! எல்லாம் கனவு! நேற்றுக்கேட்ட பிரசங்கத்தின் விளைவு.

ஆனால்.........

உண்மையாக என்னிடம் வேலை பார்க்கும் ஆறுமுகமுமா இல்லாமல் போக வேண்டும்? நான் ஆச்சரியத்தில் மூழ்கி கல்லாக உட்கார்ந்திருந்ததைக் கண்ட என் தாய்...... "ஆறுமுகம் வந்திடுவான். உனக்கு என்ன வேணும்" என்று கேட்டாள்.

"சிகரெட் டின்னை எடுங்கள்" என்றேன். அட, பாவமே, அந்த டின்னில் ஒரு சிகரெட்கூட இல்லை!

# சிறைச்சாலை

சிறைச்சாலை!

இந்த பெயரைக் கேட்டவுடனே எல்லோருடைய உள்ளத்திலும் ஒருவித பயம் ஏற்பட்டது. இன்றல்ல, ஒரு காலத்தில்.
பேய், பூதம், பிசாசு, கடவுள் போன்றகற்பனைகளுக்கு மக்கள் பயந்து வாழ்ந்ததைப்போல சிறைச்சாலைக்கு மனிதர்கள் கற்பித்த இழிவுக்காக அஞ்சியே மக்கள் வாழ்ந்தனர்.

சிறைக்குச் சென்றவனா?

அவன் சீர்கெட்டவன்—காலி—ரௌடி—போக்கிரி—சமூக விரோதி!

சிறை சென்றவனை யாருமே சீந்தக்கூடாது! ஊரோடு ஒட்டரமல் ஒதுக்கி வைக்கவேண்டும்! பெண் கொடுக்கக் கூடாது அந்தப் பேயனுக்கு.

இப்படி பல சம்பிரதாயங்களைச் சமூகம் ஏற்படுத்தியது. சிறை சென்றவர்களை மேலும் தண்டிக்கவோ திருத்தவோ! இதனால் சிலர் சிறைசெல்லவே பயந்தனர்.

சிறைக்குச்செல்ல நேர்ந்து விட்டால்......சமூக சம்பிரதாயத்துக்குப்பயந்து....தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்தனர். இதனால்தான் இன்றுகூட சிறைச் சாலையில், தண்டிக்கப்பட்டோர் உள்ளே சென்றவுடன் இடுப்பிலே கட்டப்பட்டுள்ள (அரைஞாண்) கயிற்றை, அதிகாரிகள் அறுத்து விடுகின்றனர். சமூகத்திற்குப்பயந்து, அந்தக்கயிற்றின் உதவியால் தண்டிக்கப்பட்டவன் தற்கொலை செய்துகொள்

வானோ என்று சந்தேகித்தே இன்றைக்கும் அதிகாரிகள் அத்தகைய முறையைக் கடைப்பிடிக்கின்றனர்.

ஆனால் இந்தக்காலத்தில்?

சமூகத்தின் கெடுபிடிக்குப் பயந்து எந்தக் கைதியும் தற்கொலை செய்து கொள்வதே இல்லை. சமூகத்திற்கும் எவரும் பயப்படுவதே இல்லை.

இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன? சமூகம் அலட்சியப்படுத்தப்படுவது ஏன்? இவைகளை ஆராய்வது மிகமிக அவசியம்.

கோழை தண்டிக்கப்படும்போது சமூகத்திற்கும் சிறைச் சாலைக்கும் பயப்படுவான்; ஆனால் வீரன் தண்டிக்கப்படும் போது எதற்கும் அஞ்சமாட்டான். வீரன் யார்? கோழை யார்?

குற்றவாளிதான் இயற்கையிலே கோழையாவான். கோழையிடத்திலே பயம் நிச்சயம் இருக்கும்! உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படும்போது சமூகத்திற்கு—சிறைச் சாலைக்கு இந்த நாட்டில் மதிப்பு இருந்தது. ஆனால் குற்றமற்றவன் (வீரன்) அக்கிரமமாகத் தண்டிக்கப்படும்போது சமூகத்தை—சிறையை எதிர்த்துப்போராடி தகர்த் தெறிந்து விடுகிறான்.

இப்படி ஒரு (குற்றமற்ற) வீரனால் அல்லது கூட்டத் தால் சமூகமும், சிறையும் அலட்சியப்படுத்தப்படும்போது., கோழையும் (குற்றமுள்ளவனும்) பயமற்ற தன்மைக்கு வந்துவிடுகிறான்.

பழைய காலத்தில் குற்றம் புரிந்தவர்கள் நீதியின் (Court of Justice)படி தண்டிக்கப்பட்டார்கள்; ஆனல்— இந்த காலத்தில் சட்டப் (Court of Law) படி தண்டிக்கப் படுகிருர்கள். இதனுல் உண்மைக் குற்றவாளிகள் தப்பி விடவும், நிரபராதிகள் தண்டிக்கப்படவும் செய்கின்றனர்.

மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்ற கோட்சே, கை யோடு பிடிக்கப்பட்டும், நீதியின்படி உடனே தண்டிக்கப்பட முடியாமல், சட்டப்படி விசாரிக்கப்பட்டு, சட்டப்படிதான் தீர்ப்பு வழங்கப்படுகிறதே தவிர, நீதியின்படி அல்ல.

எதற்கும் அப்பாற்பட்ட நீதியை, இன்றைய ஆட்சி முறை சட்டத்திற்குள் அடக்கி வைத்திருக்கிறது. சட்டத் திற்கு அப்பால் மறைந்து கிடக்கும் நீதியைப்பற்றி, இன் றைய சமூகம் கவலைப்படுவதே இல்லை.

இதனுல்தான் இன்றைய சமூகமும்...சட்டமும் துணிச் சலாக புறக்கணிக்கப்படுகிறது; எதிர்க்கப்படுகிறது. சட்ட விரோதம் செய்வது இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது.

நிறைய சிறைச்சாலைகளை நிர்மாணிப்பதன் மூலம், இன் றைய சட்டவிரோத சக்திகளை கட்டுப்படுத்த முடியவே முடி யாது. சட்டத்திற்கு உட்படாத நீதியை நிலை நிறுத்துவதின் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதை சமூ கமும், சர்க்காரும் உணரவேண்டும்.

குற்றமற்றவர் தண்டிக்கப்பட ஆரம்பித்தவுடன் "சிறைச்சாலை என்ன செய்யும்?" என்ற கேள்வி எழ

ஆரம்பித்து. சிறைச்சாலை எதுவும் செய்ய முடியாது என்ற திடம் ஏற்பட ஆரம்பித்தது.

சிறைச்சாலை—மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாகக் கருதப்பட்டது; சிங்காரச் சோலையாக எண்ணப்பட்டது.

நீதியின்படி குற்றவாளியும், நீதியின்படி நிரபராதியும் சட்டப்படி குற்றவாளிகளாக தீர்மானிக்கப்பட்டு ஒரே சிறை யில் அடைக்கப்பட்டதாகவே. மக்களிடையே இக்கருத்து ஏற்பட ஆரம்பித்தது. சிறைக்குச் செல்லுவது மதிப்பாகவே எண்ணப்பட்டது.

சிறைக்குச் சென்ருல், ஒரு காலத்தில் சமூகத்தில் 'பெண்'கூடக் கொடுக்கமாட்டார்கள். ஆனல் இந்தக் காலத்தில் சிறை சென்றவர்களுக்கு பெண் மட்டுமல்ல, மண் (ஐந்து ஏக்கர் நிலம்) தானமும், பொன் (ரொக்கமான் யம்) தானமும் செய்யப்படுகின்றன.

சட்டத்தால் கைது என்று தீர்மானிக்கப்படுகிற ஒரு வன், தியாகியாக மதிக்கப்படுகிருன்.

சட்டத்தால் குற்றவாளி எனக் கருதப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவன், கோலோச்சும் கொற்றவனுக சிங்கா தனத்தில் அமர்த்தப்படும் நிலை வந்துவிட்டது.

இன்று சிறைச்சாலை என்பது அரசியல் வாதிகளுக்கு அந்தஸ்து நிறைந்த மாமியார்வீடு. அரசியல் வாதிகள் அடிக்கடி மாமியார்வீடு செல்கிருர்கள். திரும்பிவரும் போது 'அனுபவம்' என்ற அழகிய மனைவியோடு வரு கிருர்கள்.

'சிறை அனுபவம்' என்கிற சிங்கார மனைவி, அரசியல் வாதிகள் சிங்காதனம்வரை முன்னேற நல்ல துணைவியாக இருக்கிறாள்.

உண்மைக் குற்றவாளிகளாக உள்ளவர்களைச் சீர் திருத்தும் கல்விச் சாலையாக உள்ள சிறைச்சாலை, குற்ற வாளிகளை சிறிதும் திருத்தாமல் மீண்டும் மீண்டும் குற்றம் செய்யும் ஆற்றல் படைத்தவர்களாகவும்—குற்றம் செய்ய அஞ்சாதவர்களாகவும்—உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போது—இன்றைய சிறைச்சாலையை சீர்திருத்துவது எப்படி ?

''சிறைச்சாலையை சீர்திருத்துவதற்கு ஒரே வழிதான் உண்டு. அது சிறையை தகர்த்தெறிவதுதான்'' என்று ரஷ்ய ஞானி கூறியிருக்கிறார்.

ஏன் ? எப்படி ?

## 2

ரஷ்ய ஞானி கிராபட்சின் பிரபு சாதாரணமானவரல்ல, பல தடவை, பல சிறைகளிலே அவர் கைதியாக இருந் திருக்கிறார்.

அவர்தான் கூறுகிறார், சிறையைச் சீர்திருத்துவதற்கு ஒரே வழி சிறையை தகர்த்தெறிவது என்று.

குற்றம் செய்வது ஓர் வியாதிதான் ! அந்த வியாதியை, வேண்டுமென்றே சம்பாதிக்க எந்த நோயாளியும் விரும்ப மாட்டான். ஆனால் சூழ்நிலை அந்த வியாதியை சிருஷ்டிக் கிறது. சூழ்நிலையை சுத்தம் செய்துவிட்டால் வியாதிகள் தானாகவே வீழ்ச்சியடைந்து விடும்.

குற்றம் என்பது என்ன? ஒரு குறிப்பிட்ட சட்டங்களுக்கு மாருக செய்யப்படும் காரியங்கள் எதுவாக இருந்தாலும் அது குற்றந்தான்.

"சட்டம் என்பது ஓர் அரசியல் முறை; சட்டந்தான் அரசியல்" என்று லெனின் கூறியிருக்கிருர். இதன்படி பார்த்தால் அரசியல் ஆதிக்கம் யார் கையில் இருக்கிறதோ அந்த ஒரு சிலரான அவர்கள்தான் சட்டத்தை வகுப்பார்கள். அந்தச்சட்டம் அதை வகுத்த ஒரு சிலரின் நலனுக்கு ஏற்ற முறையில்தான் பெரும்பாலும் அமைந்திருக்கும்.

இந்த நிலையில் அந்தச் சட்டத்தை வகுக்காத—கோடிக் கணக்கான மக்கள், அதற்குக் கட்டுப்பட்டு நடக்க முடியுமா? சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதானே என்று சட்டத்தை உண்டாக்கியோர் சமத்துவம் பேசுவர்.

ஆனல்......

பணக்காரன்—நடுத்தரவாதி— பாட்டாளி என்ற முப்பிரிவினர் உள்ள சமுதாய அமைப்பில் 'திருடுவது குற்றம்' என்ற சட்டம் மூவருக்கும் பொதுவானதுதான். யார் திருடினலும் தண்டனை தரப்படும் என்பதும் உண்மைதான். ஆனல் திருடவேண்டிய அவசியம் பணக்காரனுக்கு வருமா? நடுத்தரவாதிக்கு வருமா? பாட்டாளி ஒருவன்தான் திருடவேண்டிய அவசியத்திற்கு வருவான். இந்தக் குற்றத்திற்கு பாட்டாளி பொறுப்பாளியாக முடியுமா?

"திருடக்கூடாது" என்று சட்டமியற்றிய சமூகமோ அரசியலோ, 'பணக்காரன் — நடுத்தரவாதி — பாட்டாளி' என்ற முப்பிரிவை ஒழித்து, பொருளாதார சமத்துவத்திற் குப்பின் "திருடக்கூடாது" என்ற சட்டத்தை இயற்றி இருக் குமேயானுல்......திருட ஒருவன்கூட முன் வரமாட்டான். சிறைச்சாலை அவசியமில்லாமல் போய்விடும். இந்தக்கருத் தால்தான் சிறையை சீர்திருத்த அதைத் தகர்த்தெறிய வேண்டும் என்ருர் ரஷ்யஞானி கிராபட்சின்.

பொதுவாக அடிமை நாடுகளில் குற்றங்கள் அதிக மாகச் செய்யப்படுகின்றன. இதற்குக் காரணம் ஒரு சிலரா கவுள்ள ஆளுபவர்கள், அவர்கள் நன்மைக்கு ஏற்றபடி சட்டங்களை அமைக்கிருர்கள்.

வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் ஆட்சி நடத்தும்போது இருந்த சட்டங்களை, காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு ஆகிய காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தனர். அந்த எதிர்ப்பு நியாயபூர்வமாக சரி என்ருலும் சட்டபூர்வமாக குற்றம் என்று ஆங்கிலேயர்களால் கருதப்பட்டது. காங்கிரஸ் தலைவர்களுக்கு தண்டனையும் தரப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

"அமைதி சுதந்திரத்தின் குழந்தையே அன்றி அதன் தாயல்ல! எனவே அடிமை நாட்டில் அமைதி இருக்க முடி யாது" என்று பண்டித ஜவஹர்லால் முன்பு கூறியிருக் கிருர்.

பலர் அடிமைகள்; சிலர் ஆதிக்கக்காரர்கள் என்ற அடிப்படையில் சட்டம் அமைக்கப்படும்போது, குற்றம்

தாகைவே உற்பத்தியாகிவிடும். அதைத் தடுக்க் சிறைச் சாலையாலோ இதர தண்டனைகளாலோ இயலவே இயலாது.

இதை ஆங்கிலேயர் ஆட்சியும், காங்கிரஸ் கிளர்ச்சியும் நன்கு நிரூபித்துவிட்டன. ஆங்கிலேயர் காலத்திய சிறைச்சாலை, காங்கிரஸ் தலைவர்களை சட்ட விரோதம் செய்யாதபடி திருத்திவிடவில்லை; மாருக ஆங்கிலேய சட்டம் உடைக்கப்படும் உணர்ச்சியைத்தான் சிறைச்சாலை கற்பித்தது.

சரியான சமூக அரசியல் அடிப்படையில் அமைக்கப்பட்டஎந்தச் சட்டமும் என்ருவது ஒருநாள் உடைத்தெரியப் படுவதைத்தான் சரித்திரம் கூறுகிறது.

இன்றைய இந்திய அரசாட்சியில்கூட குற்றங்கள் மலிந்துவிட்டன; சிறையிலே இடமில்லாமல் இருக்கின்றனர். இது எதனை காட்டுகிறது என்ருல், இன்று இருக்கிற சட்டம் ஆங்கிலேயர் சட்டம்போல மோசமானதுதான்,

ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு ஏற்ற சட்டத்தை அமைத்ததுபோல, 'இந்திய சுயராஜ்யம்' என்கிற பெயரிலே, வடநாட்டு ஆதிக்கக்காரர்கள், அவர்கள் நன்மைக்கு ஏற்றபடி சட்டத்தை அமைத்துக் கொண்டார்கள்.

இந்த ஒருதலைப் பட்சமான சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகள் நடந்து, சிறை நிரம்பிக்கொண் டிருக்கிறது. சமீபத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஐயாயிரம் பேர்கள்வரை, இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்

பட்டு சிறையிலே அடைக்கப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. அண்ணுதுரை உள்பட ஆயிரமாயிரம் தோழர்கள் இன்னும் சிறையிலேதான் இருக்கிருர்கள்.

அடிமை நாட்டில் அமைதி இருக்காது என்று மக்களோடு மக்களாக முன்பு இருந்த ஜவகர்லால் நேரு கூறிணுரல்லவா, அது நூற்றுக்குநூறு உண்மை. ஆணுல் பண்டித ஜவகர் இந்திய பிரதம மந்திரியாக வந்தபின் அதனே அடியோடு மறந்துவிட்டார்.

சரியில்லாத சட்டத்தை மாற்றி அமைத்து அமைதியை நிலைநாட்ட வேண்டிய பிரதம மந்திரி நேரு, சிறைச்சாலையின் மூலம், நிலைமையைச் சீர்திருத்த இன்று முயலுகிருர்.

வெறும் தண்டனே அமைதியை ஏற்படுத்தும் மருந்து அல்ல என்ற உண்மையை சாதாரண நேரு அறிவித்தார்; ஆனுல் மந்திரி நேரு மறந்தவர்போல நடிக்கிருர்.

கடுமையான தண்டனே விதிக்கும்படி பிரதம மந்திரி நேரு, ராஜாஜிக்கு உபதேசம் செய்கிருர். இது ஆளும் கூட்டம் பரம்பரையாக கடைப்பிடிக்கும் முறைதான்.

எந்தச் சட்டம் எதிர்க்கப்படுகிறதோ அந்தச் சட்டத்தின் துணைகொண்டே, எதிர்ப்பாளர்களுக்கு தண்டனே தருவார்கள் ஆளும் வர்க்கத்தினர்.

அந்த முறையைத்தான் பிரதம மந்திரி நேரும், ராஜாஜியும் இன்று கடைப்பிடிக்கின்றனர். ஆணுல் சமூக மக்கள்

தூங்கிக்கொண்டு இருப்பார்களா? சிறு கிளர்ச்சி, புரட்சி ஏற்பட்டு சமூகம் விழிப்படைந்தால்...புதுச் சட்டம் ஏற்பட்டே தீரும். இது சரித்திரம் தரும் பாடம்.

அது வரை தனி மனிதர்கள் தண்டனை அனுபவிக்கத் தான் நேரிடும்; பல கொடுந் துன்பங்களை ஏற்கத்தான் வேண்டும்; ஆனால் முடிவில் தண்டனைக்கு காரணமாக இருந்த பிற்போக்கு சக்தி அதன் பலனை அனுபவித்தே தீரும்.

சர்க்காரின் சட்டத்திற்கு விரோதமாக செய்யப்படும் எந்தக் காரியமும் குற்றமாகும். ஆனால் சர்க்கார் சட்டம், மக்களுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளதா? இந்திய அரசியல் சட்டத்தை நிர்மாணிக்கும் மூல புருஷர்களில் ஒருவராக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே அந்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று கூறி விட்டார்.

இந்த நிலையில் தென்னாட்டு மக்களின் வீழ்ச்சிக்கு காரணமாயுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோத சக்தி பெருகிவருவதிலே ஆச்சரியம் இருக்க முடியாது.

இந்திய அரசியல் சட்டம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளால் அமைக்கப்படவில்லை பணத்தாலும். போலிச் செல்வாக்காலும் கைப்பற்றப்பட்ட சிறுபான்மையோரால் அவசர அவசரமாக ஆக்கப்பட்டதுதான் இந்தியச் சட்டம்.

இதனுல்தான் அச்சட்டத்தை மாற்ற அதிகமான சட்ட விரோதங்கள் எழவும், சிறைச்சாலை நிரம்பவும் செய்கின்றன. இதன் விளைவு ?

''ஒருவன் தன்னைப்போல் இன்ப சுகத்தை அடையும் சந்தர்ப்பத்தை அளிக்க மற்றவனுக்கு மறுக்கும் வரை, ஒருவனுடைய கை, மற்றவனை அடிக்க ஓங்கியே நிற்கும்'' என்று தீவிர காங்கிரஸ் வாதியான மறைந்த புலாபாய் தேசாய் அவர்களே கூறியுள்ளார்.

இந்திய சட்டம் ஒரு சாரார் (வட நாட்டார்) வளர்ச்சிக்கு மட்டும் பயன்படும்வரை தென்னுட்டில் கிளர்ச்சி இருந்து கொண்டே இருக்கும்,

இக்கிளர்ச்சியை அடக்க ஒரே ஒரு வழி உண்டு. அது சட்டத்தைச் சீர்திருத்துவதுதானே தவிர சிறையை நிரப்பு வது அல்ல.

சட்டத்தை மாற்ருமல் சிறையை நிரப்புவதையே பிர தானமாகக் கருதிய ஆங்கிலேயர்கள் முடிவு என்ன ? இதை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

இன்றைய இந்திய சிறைச்சாலைகள் எப்படிப்பட்டது ? 'பூலோகத்தில் ஒரு நரகம் உண்டு என்ருல், அது இந்திய சிறைச்சாலைதான்' என்று கர்னல் வெட்ஜ்வுட் கூறியிருக் கிருர்.

எப்படி ?

## 3

இந்திய சிறைச்சாலைகள் பூலோக நரகம் ! இது கர்னல் வெட்ஜ்வுட் கூறியது.

மேல் நாட்டுச் சிறைகளோடு இந்திய சிறைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் அவர் அவ்விதம் கூறியிருக்கிறார்.

இந்திய சிறைகளை ஒப்பிடுவானேன்? இந்திய வீடுகளை, மேல் நாட்டு வீடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்திய வீடுகளெல்லாம் புறாக்கூடுகள்தான்!

மேல்நாட்டு வீடுகளிலே, ஆளுக்கொரு அறையும், குளிக்க ஒரு அறையும், குந்திப் பேச ஒரு ஹாலும், சமையலுக்கும், சாப்பாட்டுக்கும் தனித்தனி இடமும், வெளிச்சத்திற்கு வேண்டிய ஜன்னலும் இன்னுமென்ன எல்லா வசதிகளும் இருக்கும். ஏழைகள் வசிக்கும் இடத்தில்கூட.

ஆனால்—இந்திய வீடுகளில் நூற்றுக்கு ஒன்றில்கூட இந்த வசதிகள் கிடையாது. ஏதோ ஓரிரு பணக்காரர்களின் 'பங்களா'க்கள்தான் அரைகுறை நாகரீகமாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

சுடுகாட்டிலாவது சுதந்திரமாக நீட்டிப் படுக்க, ஆறடி மண் அனைவருக்கும் தரப்படுகிறது. ஆனால், லட்சக்கணக்கான இந்திய குடிசைகள் நீள அகலத்தில் ஆறடிகூட இல்லாமல் இருட்டறையாக அமைந்தும் இருக்கின்றன.

இந்தியச் சேரிகளில் வாழும் மக்களின் குடிசைகளும், பம்பாய் தாராவிப் பகுதியில் வாழும் தமிழர்களின் வீடுகளும் மேலே குறிப்பிட்ட 'பிளான்'படி கட்டப்பட்டவைதான்.

மாட மாளிகைகளையும் மண் குடிசைகளையும் காண்ப வர்கள் என்ன நினைப்பார்கள்? மதுரையிலே பிரமாண்ட மாக அமைந்துள்ள திருமலை மஹாலைப் பார்த்து. ''இது என் அப்பன் வீட்டுக் கோழிகூடு போல இருக்கிறது'' என்று திருமலையாரின் மனைவி கூறினாளாம்.

ரஷ்ய ஜெயில்களில் கைதிகள் இஷ்டம்போல் ஆடவும், பாடவும், படிக்கவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

மேல்நாட்டு சிறைகளில் கைதிகள் இஷ்டம்போல் சிகரெட் குடிக்கலாம்.

கைதிகள் பொழுதை ஆனந்தமாகக் கழிக்க, சினிமா, நாடகம், இதர விளையாட்டு வசதிகள் ஆகியவை மேல்நாட்டு ஜெயில்களில் உண்டு.

ரஷ்ய ஜெயில்களில் கல்வி கற்க விரும்பும் கைதிகள், சர்வகலாசாலைவரை படித்துவர அனுமதிக்கப்படுகிறார்கள்.

சிறையில் படித்துப் பட்டம் பெற்று பெரிய பதவிகளில் இருக்கும் கைதிகளும் ரஷ்யாவில் இருக்கிறார்கள்.

ஆனால்—இந்திய சிறை இதற்கு நேர்மாறானதாகும். மேல் நாட்டு சிறைகள் கைதியும் மனிதன்தான் என்ற கொள் கையைக் கடைப்பிடிக்கிறது. ஆனால் இந்திய சிறை கைதி யை மனிதனாக அல்ல, மிருகமாக மதிக்கிறது.

இதனால்தான் கர்னல் வெட்ஜ்வுட் இந்திய சிறைகளை இகழ்ந்து கூறினார்.

ஆனல்—வெள்ளைக்காரன் காலத்து இந்திய சிறைகளை யும், காங்கிரஸ் காலத்து சிறைகளையும் கர்னல் வெட்ஜ்வுட் ஒப்பிட்டிருந்தால்...இந்திய சிறைகள் காட்டுமிராண்டிகளின் குகை என்பதை கூசாது கூறியிருந்திருப்பார்.

1941ம் வருடம் வெள்ளையன் காலத்திய எரவாடா சிறையில் சர்தார் படேல், பி. ஜி. கேர், புலாபாய் தேசாய், கே. எம். முன்சி ஆகியோர் இருந்தனர். இவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளைக் கவனித்தால்...காங்கிரஸ் தியாகிகள் சிறையில் இருந்தார்களா, அல்லது அரண்மனை யில் இருந்தார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

ஒரு அறையில், வெண்ணெய், நெய், பால், தயிர் ஆகிய வைகளை நிறைத்துவைத்திருப்பாராம் சர்தார் பட்டேல்; நினைத்த நேரத்திலே டீ போட்டு சாப்பிடவும், இஷ்டப்பட்ட பலகார பக்ஷணம் சாப்பாடு தயாரிக்கவும் செய்வார்களாம். இந்த உண்மையை 'படேலுடன் ஒருநாள்' என்ற திரு. கே. எம். முன்சியின் கட்டுரையில் இருந்து அறியலாம்.

அகாகான் அரண்மனையில்தான் மகாத்மா காந்தி சிறை வைக்கப்பட்டு, சகல சௌகரியங்களும் செய்விக்கப் பட்டிருந்தார்.

பண்டிதநேரு சிறையில் இருக்கும்போது, தன் மகளுக்கு உலக வரலாற்றையே எழுதும் அளவுக்கு வசதி செய்து கொடுக்கப் பட்டிருந்தார்.

மறைந்த சத்தியமூர்த்தியும் அவருடைய மகளுக்கு தினமும் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்க, சென்னை சிறையில் அனுமதிக்கப் பட்டிருந்திருக்கிறார்.

திரு. சிதம்பரனார் போன்ற ஒருசிலர் மாத்திரம், செக்கு இழுத்ததாக வர்ணிக்கப்படுகிறது. சாதாரண காங்கிரஸ் வாதிகளுக்கு, சிலபல தொல்லைகள் இருந்திருக்கலாம். வெள்ளைக்கார ஆட்சியில்.

ஆனால் இன்றைய காங்கிரஸ் சிறையில் அரசியல் தலைவர்களுக்கும் ஒரேவித நீதிதான் வழங்கப்படுகிறது. அரசியல் கைதிகளை இன்றைய காங்கிரஸ் அரசாங்கம், கிரிமினல் கைதிகளைப்போல நடத்துவதற்கு எத்தனையோ உதாரணங்களைத் தரமுடியும்.

இந்திய சிறைகளில் மூத்திரவாடையும், கொசு மூட்டைக் கடியும் பெரும்பாலும் இல்லாமல் இருப்பதில்லை கைதிகள் வாரம் ஒருமுறை குளிப்பதற்குக்கூட அனுமதிப்பதில்லை.

இயந்திரம் செய்யும் வேலைகளை கைதிகளைக்கொண்டு காங்கிரஸ் ஆட்சியில் உள்ள சிறையில் முடித்து வருகிறார்கள். திருச்சி மத்திய சிறையில் நெல் குத்தும் முறை இன்னும் நீடிக்கப் பட்டிருக்கிறது.

தினசரியும் ஒரு கைதி ஒரு மூட்டை நெல் குத்தியாக வேண்டும். நெல் குத்த உலக்கை கொடுப்பதில்லை. ரீப்பர் சக்கையான நீளக் கம்பு ஒன்று கொடுத்துக் குத்தச் செய்கிறார்கள், மூங்கில் சிலம்பு குத்தக்குத்த கையில் இரத்தம் வழிவதையும் பொருட்படுத்தாமல் நெல் குத்த கைதிகள்

கட்டாயப்படுத்தப் படுகின்றனர். இதைப் போல பல உண்டு. அவைகளை சிறைசென்ற அனுபவத்தை வைத்தே அடுத்து ஆராய்வோம்.

## 4

1948ல் சென்னை அரசாங்கம் இந்தியை பள்ளிகளில் கட்டாய பாடமாக வைத்திருந்தது. அதை எதிர்த்து ஒழிக்க திராவிடர் கழகம் முடிவு செய்தது.

செப்டம்பர் மாதம் 15௳ நாடெங்கும் அடையாள மறியல் செய்யும்படி, திராவிடர்களுக்கு பெரியார் உத்தரவிட்டிருந்தார். அதன்படி நானும் எனது தோழர்கள் பத்துப் பேர்களும் விருதுநகர் பள்ளியின் முன் மறியல் செய்வதென முடிவு செய்தோம்.

செப்டம்பர் 15௳ காலை தமிழ் பரீட்சை இருந்ததால், மதியம்மறியல் செய்ய முடிவு செய்து, ஊர்வலமாக விருது நகர் கே. வி. சாலா உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றோம். இந்தி ஒழிக, தமிழ் வாழ்க, என்று முழங்கிய வண்ணம் மறியலை ஆரம்பித்தோம்.

ஆனால்—காங்கிரஸ் தோழர்கள் ஏட்டிக்குப்போட்டி செய்ய இந்தி வாழ்க, தமிழ் ஒழிக என்று எதிர்க் கூச்சல் போட்டனர், இந்த அறியாமைக்காக வருந்தி, ஆக்க வேலையில் ஈடுபட்டோம்.

அடுத்த நகரசபையால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிக்கு மறியல் படை புறப்பட்டது. காங்கிரஸ்காரர்களும் எங்களோடு போட்டிக் கூப்பாடு போட்டவாறு வந்தனர். ஆனால் திடீரென்று பஸ்ஸில்வந்த போலீஸ் படை,

போட்டிக்கூச்சல் போட்டுவந்த காங்கிரஸ்காரர்களை தடியால் அடித்து விரட்டினர். இருக்கிற இடம் தெரியாமல் காங் கிரஸ்காரர்கள் மறைந்தனர்.

நான் உள்பட பதினுெரு பேர்களை போலீசார் கைது செய்து, பஸ்ஸில் ஏற்றிச் சென்றனர். எங்காவது காட்டில் கொண்டு போய் இறக்கிவிடப் போகிருர்களோ என்ற சந் தேகம் எங்களுக்கு ஏற்பட்டது. ஏனெனில் காங்கிரஸ் அர சாங்கம், சென்னை இந்தி எதிர்ப்பின்போது மறியல் செய்த ஓர் கர்ப்ப ஸ்திரியைக் காரில் ஏற்றி, ஊருக்கு வெளியே பல மைல்களுக்கு அப்பால் இறக்கி விட்டுவிட்டு வந்தனர், அந்த முறை இங்கும் கடைப் பிடிக்கப்படுமோ என்று சந் தேகித்ததில் தவறு என்ன ?

ஆனுல் நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு சுமார் மதியம் 2–30 மணிக்கு அழைத்து வரப்பட்டோம். எங்களில் பலர் மதியம் சாப்பிடக்கூட இல்லை. இது தெரிந்தும் போலீஸார் சாப்பாடு போடவுமில்லை.

மாலை ஐந்துமணிக்குமேல் எங்களை மாஜிஸ்ட்ரேட் முன் அழைத்துச்சென்றனர். இந்தியை எதிர்க்கும் உரிமை எங் களுக்கு உண்டு என்பதாக வாதாடினுேம். நான்கு நாட்கள் தண்டனை தந்து தீர்ப்பளித்தார், மாஜிஸ்ட்ரேட்.

இரவு சாப்பாட்டை எங்கள் செலவில் வைத்துக்கொள் ளும்படி மாஜிஸ்ட்ரேட் கூறினுர். சர்க்கார் விருந்தினராக நாங்கள் சென்றிருக்கும்போது அவ்விதம் செய்வது முறை யாகுமா? சர்க்கார் செலவிலேயே சாப்பாடு போடும்படி மாஜிஸ்ட்ரேட்டிடம் கூறினுேம்.

மாலை ஆறுமணிக்கு இரவு சாப்பாடு ஹோட்டலில் இருந்து எடுத்துவரப்பட்டது. ஜெயில் 'வராண்டா'வில் உட்கார்ந்து எல்லோரும் சாப்பிட்டோம்,

சாப்பாடு முடிந்ததும் நாங்கள் கட்டியிருந்த அரைஞாண் கயிற்றை அறுத்துவிட உத்திரவிட்டனர். கணவன் இறந்து விட்டால் தாலி அறுக்கப்படுகிறது சமூகத்தில். கைதியாகி விட்டால் அரைஞாண் கயிறு அறுக்கப்படுகிறது சிறையில்.

கைதியும் விதவையும் ஒரே ரகந்தான், அடைத்துவைக்கப்படுவதிலும், வாழாவெட்டியாக இருப்பதிலும்!

விதவையாக்கப்பட்ட பாவைக்கு, பட்டு பீதாம்பரமும் கட்ட உரிமையில்லாதிருப்பதுபோலவே சிறைகளில் கைதிகளுடைய ஆடைகளும் பறிக்கப்பட்டு, வேறு உடைகள் அளிக்கப்படுகின்றன.

இரண்டு பேர்கள் இருக்கவேண்டிய சிறை அறையில், நாங்கள் பதினேரு பேர்களும் அடைக்கப்பட்டோம். காங்கிரஸ் ஆட்சியில் உணவு, உடை வேலைபஞ்சம், இருப்பதைப் போல சிறையில் இடப்பஞ்சமும் இருந்தது, என்ன செய்வது?

சுடுகாட்டிலாவது காலை நீட்டிப் படுக்க ஆறடி நீளமுள்ள அகன்ற இடம் பிணத்திற்குத்தரப்படுகிறது, ஆனல் நாங்கள் இருந்த சப்ஜெயிலில், மனிதனுக்கு நாலடி இடங்கூடத் தரப்படவில்லை. குறுக்கும் நெடுக்குமாக எப்படியோ படுத்தோம். இரவு பூராவும் மூட்டைப் பூச்சிகளோடு போரிட்டோம்.

காலை எழுந்ததும், எங்களுக்கு கஞ்சி கொடுக்கப்பட்டது. எங்களில் பலர் காலை உண்ணுவிரதம் இருந்தோம். சாப்பாடு முடிந்தவுடன், உடனே மீண்டும் எங்களை உள்ளே அடைத்தார்கள். இவ்விதம் சாப்பாடு நேரத்தைத் தவிர சிறையில் அடைக்கப்பட்டே இருந்தோம்.

இவ்விதம் நான்கு நாட்களை விருதுநகர் சப் ஜெயிலில் கழித்துவிட்டு விடுதலை அடைந்தோம்.

ஜெயில் என்பது அரசியல்வாதிகளுக்கு மாமியார் வீடு போன்றதல்லவா? மருமகனை அடிக்கடி விருந்துக்கழைப்பதைப்போல, அரசியல்வாதிகளை அரசாங்கம் அடிக்கடி சிறைக்கு அழைக்காமல் இருப்பதில்லை.

1950 ஜூலை 19உ காந்தியார் சாந்தியடையி என்ற புத்தகம் எழுதியதற்காக, ஆறுமாத கடுங்காவல் தண்டனையும், ஐந்நூறு ரூபாய் அபராதமும், கட்டத் தவறினுல் மேற்கொண்டு மூன்று மாத கடுங்காவல் தண்டனையும் ஆக முக்கால் வருடம் தண்டிக்கப்பட்டு, முசிரி சப் ஜெயிலுக்கு கொண்டு செல்லப்பட்டேன்.

என்னேடு, என் புத்தகத்தை பிரசுரித்த தோழர் கலியபெருமாளும், 'அழியட்டுமே திராவிடம்' என்ற புத்தகத்தை வெளியிட்டதற்காக தோழர் தங்கவேலு என்பவரும் துணைக்கு வந்தனர்.

விருநகர் சப் ஜெயிலைவிட முசிரி சப் ஜெயில் சிறிது பெரிதாக இருந்தது. அதனுல் கைதிகளை புளிமூட்டைபோல் அடைக்கவில்லை. எங்கள் மூவரையும் ஒரு அரையில் அடைத்தார்கள்.

இரண்டு தினங்கள் அந்த சிறையில் இருந்தோம். மூன்றும் நாள் வெள்ளிக்கிழமை திருச்சி சிறைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள்.

மாலை ஆறு மணிக்கு திருச்சி சிறைக்குள் நுழைந்தோம்.

எங்களை 'குவாரன்டைன்' பகுதிக்கு அழைத்துச்சென்று, எங்கள் ஆடைகளை எல்லாம் அகற்றி நிர்வாணமாக்கி, கோவணம் ஒன்று கருணையோடு தானம் செய்தார்கள்.

சிறை தவச்சாலை அல்ல என்று ஒர் அறிஞன் சொல்லியிருக்கிறன். ஆனல்—'கோவணம்' கொடுத்ததைப் பார்த்தால், தவச் சாலைதானே என்று எண்ண வேண்டியிருந்தது.

எங்கள் மூவரையும் பிரித்து, தனித்தனி இருட்டறையில் அடைத்தனர். ஏகாந்தமாக இரவு பூராவும் இருட்டறையில் தவமிருந்தோம். எங்கள் தவத்தைக் கெடுக்க மேனகையோ ரம்பையோ வரவே இல்லை.

"ஒரு தனி நபரை ஏகாந்தமானதொரு அறையில் நீண்ட நேரம் அடைத்து வைப்பது என்பது மிகவும் கொடுமையானது" என்று சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா சமீபத்திலே பேசியிருக்கிறர்.

"சென்னை சிறைகளை நான் சமீபத்தில் பார்வையிட்டேன். சிறையில் ஏராளமான தனி அறைகள் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டேன்."

"இதர மாகாணங்களில் 50 கைதிகளை ஒன்ருகச் சேர்த்து விசாலமான அறைகளில் அடைத்து விடுவார்கள். ஆனல் சென்னை சிறைகளில் அதுமாதிரி இல்லாததைப் பார்த்து பெரிதும் ஆச்சரியமடைந்தேன்"

"மற்ெருரு சிறையில் ஓர் இருட்டறையில் ஏகாந்தமாக ஓர் கைதி அடைத்துவைக்கப் பட்டிருந்ததை பார்த்தேன். இது மிகவும் கொடுமையானது"

இவ்விதம் பேசியவர் சென்னை கவர்னரும், காங்கிரஸ் காரருமான ஸ்ரீ பிரகாசாதான். இதிலிருந்து பூலோக நரகம் சென்னை மாகாண சிறைகளில்தான் இருக்கிறது என்பதைத் தைரியமாகக் கூறலாம்.

"நான் சிறையில் இருந்தபோது சவரம் செய்துகொள் வதற்காக க்ஷவரத்தொழிலாளியின் உதவியை நாடியதில்லை. ஏனெனில் க்ஷவரக் கத்தியைக்கொண்டு அவன் என்னைத் தீர்த்துக்கட்டி விடுவானே என்று நான் பயந்து கொண் டிருந்தேன்" என்று ஸ்ரீ பிரகாசா பேசியுள்ளார்.

ஆனல்—திருச்சி சிறையில் உள்ள கைதிகள் அதற்காக பயப்படவில்லை. பலவந்தமாக கைதிகள் மொட்டையடிக் கப்படுகிருர்கள். அதுவும் க்ஷவரக்கத்தியால் அல்ல; ரேசர் பிளேடுகளின் உதவியால் பெரும்பாலும் மொட்டையடிக்கப் படுகிறதென்ருல் ஸ்ரீ பிரகாசா அவர்கள் இக்கொடுமையை எப்படி வர்ணிப்பாரோ? நாங்கள் மூவருமே மறுநாள் பலாத் காரமாக மொட்டையடிக்கப்பட்டோம்.

இந்த மொட்டைக்காட்சிகளோடு, ஆறுதின சிறை வாசத்திற்குப்பின் ஜாமீனில் விடுதலை அடைந்தோம். திருச்சி செசன்ஸ் கோர்ட்டில் எங்கள் அப்பீல் நடந்தது,

1950 ஆகஸ்ட் 18உ ஒரு மாத வெறுங்காவல் தண்டனை எங்கள் மூவருக்கும் விதிக்கப்பட்டு, கை விலங்கு மாட்டப்பட்டு, அன்று திருச்சி சப்ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். விருதுநகர், மூசிரி, சப்ஜெயிலைவிட திருச்சி சப்ஜெயில் சிறிது பெரிதாக இருந்தது.

மறுநாளே மீண்டும் திருச்சி ஜெயிலுக்குக் கொண்டு செல்லப்பட்டு· செப்டம்பர் 1உ வரை குவாரண்டைன் பகுதியில் இருந்தோம். செப்டம்பர் 2உ எங்களை சென்ட்ரல் ஜெயிலின் உள்ளே கொண்டு சென்றார்கள்.

அங்குதான் உலக்கை இன்றி நெல்குத்தும் கொடுமை நடக்கக் கண்டோம். கைதிகள் மிருகத்தனமாக நடத்தப் படுவதையும் கண்டோம். கைதிகளை மானபங்கப்படுத்த வோ அவமரியாதையாக நடத்தவோ சிறை அதிகாரிகள் தயங்குவதே இல்லை.

இந்த கொடுஞ் சிறையில் இருந்து 1950 செப்டம்பர் 11-ல் விடுதலை அடைந்து வெளியே வந்தோம், அதோடு காங்கிரஸ் அரசாங்கம் எங்களை விடவில்லை.

1953 ஜூலை 8-ல் ஆச்சாரியார் கல்விதிட்டத்தை எதிர்த்து ஊர்வலம் சென்றதற்காக, நான் உள்பட 56 பேர்களை சென்னையில் கைதுசெய்தார்கள்.

அன்று இரவு பெரிமேட் 'லாக்கப் சிறையில்' ஒரே அறையில் 15 பேர்களை அடைத்து வைத்தார்கள்· மறு

நான் எங்களை சென்னை 'பெனிடன்சியர்'க்கு கொண்டு சென்றனர்.

கீழே ஆறு அறைகளும், மாடியில் ஆறு அறைகளும் உள்ள குவாரண்டைனில் எங்களை 10 நாள் ரிமாண்டில் வைத்தார்கள். ரிமாண்டில் இருந்ததால் சில வசதிகள் செய்து கொடுத்தனர்.

ஜூலை 17உ வெளியே விடப்பட்டோம். 30உ பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், கோர்ட்டை சிறையாக்கி கோர்ட் கலையும்வரை தண்டனை தந்தார்.

இதோடு எங்கள் சிறைவாழ்வு முடிந்துவிட்டது என்று நாங்கள் கருதவில்லை. இன்னும் எத்தனை தடவையோ—எங்கெந்த ஜெயில்களோ—யார் கண்டது.

ஆனல்......

ஜெயில் என்பது அரசியல் வாதிகளுக்கு மாமியார் வீடு தான். அடிக்கடி அரசியல்வாதிகளுக்கு அழைப்பு வரும், திரும்பிவரும்போது, அனுபவம் என்ற மனைவி கூடவே வருகிருள்.

மனைவி வாழ்க்கைத் துணைவிதான். அடிக்கடி சிறை செல்லும் தைரியத்தை அந்த அனுபவ மனைவி ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் ஊட்டுகிருள்.

அரசியல்வாதி மோட்ச ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே பாடு படுகிருன். இடையிலே, இந்திய சிறைச்சாலைகளைப் போன்ற நரகங்கள் எதிர்ப்படுவதிலே ஆச்சரியமே இல்லை.

// பிற நூல்கள்

*

புலவர் சா. மருதவாணன்

**மணமக்களுக்கு**

எஸ். பி. இராமச்சந்திரன்

**அன்னு கரினு**

**ஆண்டன் செஹாவின் கதைகள்**

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

**கேட்கவில்லை**

டாக்டர் எஸ். ஏ. சஞ்சீவி

**வாழ்க்கைக் கலை**

ர. சண்முகம்

**விபரீதக் கொலை**

புவியரசு

**மல்லத்துரை மர்மம்**

சாம்ராஜ்

**பிரதி பலன்**

மற்றும் ஆர். எஸ். மணியின் துப்பறியும்

நாவல்களும் கிடைக்கும்

விவரங்கட்கு:

**முருகன் நிலையம்**

பெரிய கடை வீதி, கோயமுத்தூர்

*விநோதன் அச்சகம் சென்னை - 1.*